# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு 2030 ஆடி 07 வெள்ளிக்கிழமை [23-07-1999] UTHAYAN A LivelyNationalTamilDaily கதிர்:205


# மாங்குளம் - துணுக்காய் ஊடாக பாதை திறக்க அரசு புதிய யோசனை

## புலிகள் தெரிவித்த மாற்று யோசனை நேற்றைய மாநாட்டில் நிராகரிப்பு

வவுனியா, ஜூலை 23

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் மாங்குளம் — துணுக்காய் வீதியூடாக பாதை ஒன்றைத் திறக்கும் புதிய யோசனை ஒன்றை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு நேற்று அனுப்பியுள்ளது.

கண்டி — யாழ்ப்பாணம் வீதியூடாக மாங்குளம் பகுதியில் பாதை ஒன்றைத் திறக்கும் முயற்சி தோல்வியடைந்ததை அடுத்தே அரசாங்கம் புதிய யோசனையை முன்வைத்துள்ளது.

கண்டி-யாழ்ப்பாணம் 'ஏ 9' வீதியில் மாங்குளம் பகுதியில் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்தி அதனூடாகப் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பாக அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடிதத் தொடர்புகள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாக மேற்கொள்ளப்பட்டு வந்தது தெரிந்ததே.

இந்தப் பாதை திறப்பு தொடர்பாக அரசு விதித்த நிபந்தனைகளை ஏற்க மறுத்த விடுதலைப் புலிகள் உயிலங்குளம் — பள்ளமடு வீதி ஊடாக போக்குவரத்துப் பாதை திறக்கும் மாற்று யோசனை ஒன்றைத் தெரிவித்து அதனை நேற்று முன்தினம் அரசாங்கத்துக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. ஆர்ப்பாட்டம் அமைதியாக முடிந்தது

### ஜனாதிபதியின் கொடும்பாவி எரிப்பு

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் போராட்டங்களை ஐ.தே.க. அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடத்தியது.

1994 ஆம் ஆண்டு அரசு பதவியேற்றபோது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததைக் கண்டித்தும் —

கடந்த 15 ஆம் திகதி ஐ. தே. க. பேரணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் — ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்தில் சுமார் 3 ஆயிரம் பேர் கலந்து கொண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் ஆசிரியர் சங்கம் பகிஷ்கரிப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 23

''அரசாங்கம் ஒதுக்கியுள்ள 15 கோடி ரூபா நிதியைஇடர் காலக் கொடுப்பனவுக்கும் அதிபர் சம்பள நிலுவைக்கும் சமமாகப் பங்கிட வேண்டும். அன்றேல் எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையைப் பகிஷ்கரிப்போம்''

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு சிங்கள ஆசிரியர் சங்கங்களின் கூட்டுக் குழுப் பிரதிநிதிகளுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா நேற்று கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரணாவைச் சந்

(10ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச தொண்டு அமைப்புகளுக்கு தம்நிலைப்பாடுபற்றிபுலிகள் விளக்கம்

### மல்லாவியில் நேற்றுமுன்தினம் சந்திப்பு

வவுனியா, ஜூலை 23

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையே பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பான தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் சர்வதேசத் தொண்டு அமைப்புப் பிரதிநிதிகளுக்கு விளக்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு மல்லாவியில் நடந்த சந்திப்பு ஒன்றில் வைத்து விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் இந்த விளக்கத்தை அவர்களுக்கு அளித்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், எம். எஸ். எவ். பிரெஞ்சு மருத்துவக் குழு, ஒக்ஸ்பாம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்களும் இதில் கலந்து கொண்டனர்.

பாதை தொடர்பாக தாம் ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரிவித்த யோசனைகள் மற்றும் ஸ்ரீலங்கா அரசின் போக்கு ஆகியன தொடர்பாக தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு விளக்கமளித்தார். (இ-3-6)

## பாதையை திறக்கக்கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு ஜூலை 23

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு பாதை ஒன்றைத் திறக்கக்கோரி மட்டக்களப்பில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் நேற்று ஆர்ப்பாட்டப் போராட்டங்கள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட பொதுமக்கள் அமைப்புக்

(9ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

வேலணை, ஜூலை 23

வேலணையில் இராணுவ பாதுகாப்பு வேலியில் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரம் தாக்கி ஆறு பிள்ளைகளின் தந்தையான கடற்றொழிலாளி ஒருவர் நேற்றுக் காலை துடி துடித்து இறந்தார்.

மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் அம்பிகை நகர் 2 ஆம் வட்டாரம் வேலணையைச் சேர்ந்தவருமான கனகையா சிவயோகலிங்கம் (வயது 41) என்பவரே மரணமானவராவார்.

வழமைபோல் நேற்றுக் காலை 6 மணியளவில் கடற்றொழிலுக்கு சென்று விட்டு

[9ஆம் பக்கம் பார்க்க]

## அவசர நோயாளர்களில் ஒருவர் நேற்று மரணம்

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்

புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருந்து அம்புலன்ஸ் மூலம் புதுக்குடியிருப்பு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவசர நோயாளிகள் நால்வரில் ஒருவர் நேற்று மரணமானார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வட்டக்கச்சியில் வசித்துவந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான எஸ். சுந்தரராஜன் (வயது 28) என்பவரே மேலதிக சிகிச்சை பெற முடியாத நிலையில் மரணமானவராவார்.

## பூநகரி - கல்முனை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்!

பூநகரி — கல்முனைப் பகுதிகளை நோக்கிப் படையினர் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அத்துடன் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் மண்டைதீவுக் கடற்பகுதியை நோக்கி சுமார் அரை மணி நேரம் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

பாஷையூர் குருநகர், கொழும்புத்துறைப்பகுதி மீனவர்கள் நேற்றுக் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

(இ-15-17-51)

## ஜி. சீ. ஈ. பரீட்சைக்கான காகிதாதிகளை வள்ளத்தில் எடுத்துச் செல்ல ஏற்பாடு

வவுனியா, ஜூலை 23

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையை நடத்த வசதியாக அந்தப் பரீட்சைக்குத் தேவையான காகிதாதிகளைக் கடல்மார்க்கமாக அங்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

இந்தப்பரீட்சைக்கான காகிதாதிகள், வினாத்தாள்கள் ஆகியவற்றை அங்கு எடுத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகமே இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

காகிதாதிகளை அங்கு எடுத்துச் செல்ல ஏழு வள்ளங்கள் தேவை என்றும்—

அதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருமாறும் — அந்த அமைப்பு மன்னார் அரச அதிபரைக் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

பரீட்சை ஆவணங்களைக்
கொண்டு செல்வதற்கான
மோட்டார் வாகனங்களை
வாடகைக்குக் கொடுப்பதற்கான

## கூறுவிலை கோரல்

1999 - 08 - 02 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. (உ/த) பரீட்சை ஆவணங்களை ஒன்று சேர்க்கும் நிலையத்தில் இருந்து இணைப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் திரும்பவும் ஒன்று சேர்க்கும் நிலையத்திற்கு எடுத்து வருவதற்கும் மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான கூறு விலைகளை 1999 - 07 - 29 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன் இந்த அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாண வலயம்.

(சி/8275)



## இலங்கை மின்சார சபை
## அறிவித்தல்

பழுதடைந்த மின்கம்பங்கள் விநியோகம்செய்வது மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது என அறியத்தருகின்றேன். இது குறித்து எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை தயவுடன் அறியத்தருகிறேன்.

பிரதிப் பொது முகாமையாளர்
( வடக்கு )

பி. பொ. மு[வ] அலுவலகம்,
இ.மி.சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
1999-07-22

'' சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை ''

(சி/8272)


## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை
மடியில்

1917 - 11 - 05



ஆண்டவன்
அடியில்

1990 - 07 - 18

### அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு

[முன்னாள் உரிமையாளர், மருதனார்மடம் எரிபொருள் நிலையம்.]

திதி: 1999 — 07 — 23

அன்புச் சுடரே குடும்பத்தின் ஒளிவிளக்கே
எமதினிய அப்பாவே!
அன்பாய் வளர்த்து விட்டு வெகு விரைவில்
சென்றதேனோ?
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும் உங்கள் அன்பு
முகம் மாறுமோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

238, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[67652]

## நூல்வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஐ. நா. சபையின் சர்வதேசப் பிரிவு முன்னாள் ஆலோசகர் இ. நடராசா எழுதிய ''இலங்கைத் தமிழர் கண்ணீர்'' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் பி. சூரியகுமாரன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் வெளியிடப்படும் இந்த நூல் வன்னி மக்களுக்கு அர்ப்பணிப்பாக வெளிவருகின்றது.

இந்த நூலை விற்றுக் கிடைக்கும் பணம் முழுவதும் வன்னி மக்களின் துயர் துடைக்க பொது ஸ்தாபனங்களின் மூலம் அவர்களிடம் சேர்க்கப்படும் என்று நூலாசிரியர் இ.நடராசா(தில்லைக் கூத்தன்) தெரிவித்தார்.

## கட்டடம் திறப்பு

தென்மராட்சி, ஜூலை 23

கெற்பலி மக்களினால் இரண்டு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையக் கட்டடம் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

நிலையத் தலைவர் கு. சர்வானந்தன் தலைமையில் நடைபெற்ற விழாவில் கெற்பலிப் பிரிவு கிராம அலுவலர் கே. எம் சிவகுரு, கெற்பலி அ.த.க. பாடசாலை அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-117)

## பயிற்சிப் பட்டறை

சண்டிலிப்பாய், ஜூலை 23

பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை ஒன்றுசண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அனுசரணையுடன் உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் 30 பெண்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர். 15 நாள்கள் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவிருப்பதாக சண்டிலிப்பாய்சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி. கந்தசாமி தெரிவித்தார்.(ஐ-135)


### பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை:
க. பொ. த. சாதாரணதரம்
அல்லது மேல்
தபாலில் ஆறு மாதங்களில்
பயிலலாம்.
பாலர் ஆசிரியர்சங்கம்
கொக்குவில்
(67591)



### நாகம்ஸ்
சுன்னாகம்

ரஜனி - குஷ்பு —ஜனகராஜ்
நடித்த
பாண்டியன்
காட்சிகள் 11.00, 2.00
[ புதிய நேரம் ]
[67659]



### ராஜா
யாழ்ப்பாணம்
பிரபுதேவா - கஜோல்
மற்றும் பலர் நடித்த
மின்சாரக் கனவு
10-30, 2-30
[சி/8190]


# மரண அறிவித்தல்கள்

## செல்லமுத்து இரட்ணராஜா

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த செல்லமுத்து இரட்ணராஜா 10-07-99 அன்று கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லமுத்து மற்றும் சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு மகனும் இராஜலட்சுமி (பிரதேச செயலகம் கோப்பாய்), புவனேஸ்வரி (நெசவு ஆசிரியை, பிரதேச செயலகம், கரவெட்டி), தனலட்சுமி, யோகேஸ்வரி (ஆசிரியை, யா/அச்சுவேலி ம. வி.), தவராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், கதிர்காமநாதன், சின்னத்துரை, வசுமதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் தயன் (கனடா), கஜிதன், சுஜீவன், நிரோஜன், நிரஞ்சன், நிரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியங்கா, தர்சிகா (கனடா) ஆகியோரின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24-07-99) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி செ. சின்னத்தங்கச்சி
(தாய்)

இராச வீதி,
தோப்பு, அச்சுவேலி.
(67653)

## கனகசபை சிவமூர்த்தி

(வர்ணக் கலை மாமணி)

நயினாதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வர்ணக் கலைமாமணி கனகசபை சிவமூர்த்தி 21-07-99 அன்று அகால மரணமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற கனகசபை மனோன்மணி தம்பதிகளின் செல்வப்புதல்வனும், மோகனேஸ்வரி, கோணேசமூர்த்தி, யோகமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் சகோதரரும், விக்கினேஸ்வரன் ஜெயமலர், விஜிதா ஆகியோரின் மைத்துனரும், ராஜினி, தவோதினி, விஜயந்தன், தருஷிகா, தனுஷா, தனுஷன் ஆகியோரின் மாமனாரும், தருஷன்,, நிதர்ஷன், யுனிதா ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நயினாதீவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
க. கோணேசமூர்த்தி
(சகோதரர்)

முதலாம் வட்டாரம்.
நயினாதீவு.
(67646)

## நன்னித்தம்பி தம்பியப்பா

(ஓய்வு பெற்ற ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம் K· K. S.)

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த நன்னித்தம்பி தம்பியப்பா நேற்று முன்தினம் 21—07—99 புதன்கிழமை காலமானார்.

இவர் புனிதவதியாரின் அன்புக் கணவரும், அன்னம்மா (பிரான்ஸ்), உலகநாதன் (டென்மார்க்), தவமணிதேவி (வவுனியா), பூலோகநாதன் (லங்கா சிமெந்து நிறுவனம்), தருமராசா (பிரான்ஸ்), தேவதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா (பிரான்ஸ்), இரத்தினம்மா (டென்மார்க்), பத்மநாதன் (வவுனியா), யோகலக்சுமி, மதிவதனி, சத்தியபாமா (பிரான்ஸ்), பாமா ஆகியோரின் மாமனாரும் தனுசா, தனபாலசிங்கம் (சுவிஸ்), றேணுகா, கிரிதரன், கிருபாகரன், நித்தியா, வனிதா, டில்லிதாசன், பவா, சியா, பிரசன்னா, லக்சா, அன்பரசி, சிவரூபன், அறிவழகன், ரகுபரன், ராகவன், றாகினி, நிசாந், சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-07-99) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. பூலோகநாதன்
(மகன்)

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.
(67656)

## திருமதி பொன்னுத்துரை சிவமணி

வேலணை கிழக்கு தாழிபுரம் 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பொன்னுத்துரை சிவமணி அவர்கள் 21 - 7 - 99 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகலிங்கம் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருந்தவநாதன், சிறிகரநாதன் [வெள்ளவத்தை], சிவநாதன் [வேலணை], ஜெகநாதன் [டென்மார்க்], சதானந்தன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலாதேவி [கனடா], வசந்திமாலா [வெள்ளவத்தை], ஜெகதீஸ்வரி [கோப்பாய் வடக்கைச் சேர்ந்த வீரசிங்கத்தின் மகள், தற்போது வேலணையில்], மதி [டென்மார்க்], ரதி [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று [22-7-99] வியாழக்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பொ சிவநாதன் [மகன்]
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

வேலணை.
(67663)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. கப்பல் மூழ்கி 14 இலங்கையர் பலி

கான்பரா, ஜூலை. 23

**ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான கப்பல் ஒன்று இந்து சமுத்திரத்தில் நீரில் மூழ்கியதில் அதில் பயணம் செய்தவர்களில் 14 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுகிறது.**

கடந்த திங்கட்கிழமை கிறிஸ்மஸ் தீவுப் பகுதியில் இந்தக் கப்பல் மூழ்கியதாகத் தெரிய வந்துள்ளது.

கப்பல்கவிழ்ந்ததை அடுத்து உடனடியாக மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது 5 பேர் உயிருடனும் ஒருவர் சடலமாகவும் மீட்கப்பட்டனர்.

மொத்தமாக 20 பேர் இக் கப்பலில் பயணம் செய்துள்ளனர். உயிரிழந்த 14 பேரும் இலங்கையர்களாக இருக்கலாம் என ஆஸ்திரேலிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிருடன் மீட்கப்பட்ட ஐவரும் ஆஸ்திரேலியாவின் வடமேற்கு கடற்கரை துறைமுகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணியினைத் தொடர்ந்து 3 நாள்களாக மேற்கொண்ட மீட்புப் பணியாளர்கள் நேற்றுடன் தமது மீட்புப் பணியைக் கைவிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-க)

## கெனடியின் உடல் நேற்று நல்லடக்கம்

நியூஜேர்ஸி, ஜூலை 23

கடந்த வெள்ளியன்று விமானத்துடன் காணாமற் போன கெனடி ஜூனியரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மசா சூசெற்றில் மார்தாஸ் வெனியாட்டுக்கு அப்பால் கடலில் 30 மீற்றர் ஆழத்தில் விமானத்தின் சிதைந்த—முக்கியமான ஒரு பாகத்துடன் கெனடி ஜூனியரின் சடலம் கிடப்பது தெரியவந்ததை அடுத்து மீட்புப் பணியாளர்கள் அதை வெளியே எடுத்தனர்.

ஜூனியர் கெனடியின் இறுதிக் கிரியைகள் அவரது சடலம் காணப்பட்ட கடலில் அமெரிக்க கடற்படையின் உதவியோடு நேற்று நடைபெற இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

## ஜனதா தள் மீண்டும் பிளவுபட்டது; ஓர் அணிக்கு கௌடா தலைமை!

புதுடில்லி, ஜூலை 23

ஜனதா தள் மீண்டும்பிளவுபட்டு கட்சித்தலைவர் சரத் யாதவ் தலைமையிலான ஒரு பிரிவு லோக்சக்தி மற்றும் சமதாக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒரு பகுதியாக இருக்கப் போவதாக இப்புதிய கூட்டணி அறிவித்துள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியை வலுப்படுத்தவே தாங்கள் ஒன்றுபடுவதாகவும் பாரதீய ஜனதாவை வலுவிழக்கச்செய்ய அல்ல என்றும் சரத்யாதவ், சமதாக் கட்சித் தலைவர் ஜோர்ச் பெர்னாண்டஸ், லோக் சக்தித்தலைவர்ராமகிருஷ்ண ஹெக்டே, ஜனதாதள் தலைவர்கள் ராம்விலாஸ் பாஸ்வான், ஜே எச். பட்டேல் ஆகியோர் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

ஜனதா தள்ளின் மற்றொரு பிரிவு தேவகௌடாவைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்து சரத் யாதவ்வைக் கட்சியில் இருந்து வெளியேற்றியுள்ளது.

ஜனதா தளத்தின் அரசியல் விவகாரக்குழு உறுப்பினர்கள் 16 பேரில் 11 பேர் தங்கள் வசம் இருப்பதாகவும் —

ஜனதா தள் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தங்களுடன்இருப்பதாகவும் —

தமது தலைமையிலான கட்சியே உண்மையான ஜனதாதள் என்றும் —

தேவகௌடா தெரிவித்தார். [ஐ-க[

## தேர்தல் கூட்டங்களை வீடியோப்படம் எடுக்க.இந்திய தேர்தல்கமிஷன் முடிவு

சென்னை, ஜூலை 23

இந்தியாவின் தேர்தல் கூட்டங்களை வீடியோப் படமெடுக்க தேர்தல் கமிஷன் முடிவு செய்துள்ளது. இதன் படி மத்திய, மாநில அமைச்சர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் கூட்டங்கள் வீடியோப் படமெடுக்கப்படும்.

பிரசாரக்கூட்டங்களின் போது தேர்தல் நெறிமுறைகளை மீறாமல் இருப்பதைக் கண்காணிக்க அக்கூட்டங்களை வீடியோப்படம் எடுக்க மாநிலத் தேர்தல் கமிஷனுக்குத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் அதிகாரி மற்றும் பொலிஸ் காவலுடன் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் வீடியோப் படமெடுக்கப்படும்.

இது தவிர கலவரங்கள், பதற்றமான சூழல்கள், கல் வீச்சு, பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல், ஆயுதங்களைப் பிரயோகித்தல் மற்றும் வாக்குச் சாவடிகளைச் சூறைபாடுதல் வாக்காளர்களுக்கு இடைத்தரகராக இருத்தல், வாக்காளர்களுக்குலஞ்சம்கொடுத்தல், இலவச வேட்டி, சேலை போர்வை வழங்குதல் மற்றும் அளவுக்கதிகமான கட் அவுட்கள், வாக்குச்சாவடிக்கு 100 மீற்றர் தூரத்துக்குள் வாக்கு சேகரித்தல் போன்ற விதிமீறல் நடவடிக்கைகளை வீடியோவில் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. [ஐ—8]

## டில்லிக்கு முழு மாநில அந்தஸ்து; காங்கிரஸ் தேர்தல் உறுதி?

புதுடில்லி ஜூலை 23

புதுடில்லிக்குமுழு அந்தஸ்து அளிக்க காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் உறுதி அளிக்கப்படும் என்று தெரிகிறது. மாநில முதல்வர் ஷீலா தீக்ஷித் இத்தகவலைச் சூசகமாகத் தெரிவித்தார்.

டில்லிக்கு முழு மாநில அந்தஸ்து அளிக்கவேண்டும், காவல்துறையை மாநில அரசின் கட்டுப்பாட்டில் விடவேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கோருகிறதா என்ற கேள்விக்குத் தேர்தல் அறிக்கை வரும் வரையில் காத்திருங்கள் என்று அவர் பதிலளித்தார்.

டில்லியில் மாநில அரசு நிர்வாகத்தில் இருந்தபோது காவல்துறை மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இதனால் பல சிக்கல்களை மாநில அரசு சந்திக்க வேண்டியுள்ளது. நாட்டிலேயே, காவல்துறையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திராத ஒரே மாநிலம் டில்லிதான்.

எந்தப் பிரச்சினை என்றாலும் மக்களுக்கு மாநில அரசுதான் பதில் சொல்லவேண்டியுள்ளது. சட்டம் ஒழுங்கு நிலையைப் பராமரிப்பது மத்திய அரசு என்றாலும், மாநில அரசையே மக்கள் கேள்வி கேட்கின்றார்கள்.

பாரதீய ஜனதாவிடமிருந்து மிக மோசமான நிர்வாகத்தை காங்கிரஸ் பெற்றது. எனினும், கடந்த 7 மாதங்களில் நிலைமையைச் சீர் செய்து பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளோம்.— என்று பேட்டி ஒன்றில் அவர் தெரிவித்தார். (ஐ 8)

### பொலீஸாரிடம் பிடிபட்ட பெரு கெரில்லாத் தலைவர் பொதுமக்கள் பார்வைக்கு

லீமா, ஜூலை 23

பெரு நாட்டு படையினரால் அண்மையில் கைது செய்யப்பட்ட 'சைனிங் பாத்' கெரில்லா இயக்கத்தின் தலைவர் ஒஸ்கார் ராமிர்ஸ் கடந்த திங்களன்று பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டார்.

குண்டு துழைக்காத கண்ணாடிக்கூடுஒன்றினுள்பலத்த பாதுகாப்புடன் அவர் வைக்கப்பட்டிருந்ததை பொதுமக்கள் பார்த்தனர்.

உலக அரங்கில்

பெருவில் அரசுக்கு எதிராகப் போராடும் இடதுசாரி கெரில்லா அமைப்புக்களில் பிரதானமானது சனிங் பாத்.

ஒஸ்கார் ராமிர்ஸ் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் அந்த இயக்கத்தின் தலைவராக இருந்து வருகிறார்.

பொலீஸாரால் மிகவும் தேடப்பட்டுவந்த இவர் ஒரு வாரத்துக்கு முன் கைது செய்யப்பட்டிருந்தார்.

## எஞ்சியுள்ள ஊடுருவல்காரர்களையும் விலக்குவதாக பாகிஸ்தான் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 23

சர்ச்சைக்குரிய காஷ்மீர்ப் பகுதியில் எஞ்சியுள்ள ஊடுருவல்காரர்களை விலக்கிக் கொள்வதாக பாகிஸ்தான் உறுதியளித்துள்ளது.

பாகிஸ்தானின் இராணுவ நடவடிக்கைப் பிரிவின் தலைமை இயக்குநர் நேற்று முன்தினம் மாலை இந்திய இராணுவ தலைமை இயக்குநருக்கு தொலைபேசி மூலம் இந்த வாக்குறுதியை அளித்தார்.

முஷ்கோ பள்ளத்தாக்கு, பட்டாலிக், டிராஷ் பிரிவுகளில் இருந்து ஊடுருவல்காரர்கள் விலகாமல் இருப்பது குறித்தும் —

கடந்த 11 ஆம் திகதி இரு நாட்டுஇராணுவத் தலைமை இயக்குநர்களால் எட்டப்பட்ட உடன்படிக்கை தொடர்பாகவும் —

இந்திய — பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பதற்றத்தைத் தவிர்க்கும் முகமாக சண்டை நடைபெறுவதைத் தவிர்ப்பது குறித்தும் —

இவர்கள் உரையாடினார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

['ஒப்பரேசன் விஜய்' நடவடிக்கையில் இந்திய இராணுவம் வெற்றிபெற்று விட்டபோதிலும்எல்லைக்குஅப்பாலிருந்து பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுவதைஇனிமேலும் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்றும் —

கார்கிலில் தோல்வியுற்ற பாகிஸ்தான் காஷ்மீரில் மறைமுகப் போரைத்தூண்டிவிட்டு உதவி செய்து வருமேயானால் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்—

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் நேற்று முன்தினம் விமான மற்றும் இராணுவத் தளபதிகள் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

எல்லைப்பகுதிகளான பூஞ், ரயோரி ஆகிய மாவட்டங்களில் அண்மையில் திடீரென அதிகரித்துள்ள வன் செயல்கள் பாகிஸ்தானின் கெட்ட எண்ணங்களுக்கு ஒரு சான்றாகும் எனவும் பெர்னாண்டஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

முஷ்கோ, டிராஷ், பட்டாலிக் பிரிவுகளில் ஊடுருவல்காரர்களை வெளியேற்றும் நடவடிக்கையாகப் பீரங்கித் தாக்குதல்களை இந்திய இராணுவம் மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ—க)

## வறுமையில் வாடும் பிரிட்டிஷ்சிறுவர்கள்

சுமார் 40 லட்சம் பிரிட்டிஷ் சிறார்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வதாக அறிவிக்கப்படுகிறது 1970 ஆம் ஆண்டிலிருந் எண்ணிக்கையிலும் பார்க்க இது மூன்று மடங்காக அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.


க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான

கருத்தரங்கு

இடம்: தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

நாள்: 25 – 07 – 1999 ஞாயிற்றுக்கிழமை

பாடம்: பொருளியல்

கருத்துரை வழங்குபவர்: திரு. வே. கருணாகரன்
ஆசிரியர்: யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்,
பருத்தித்துறை.

(67642)



கண்ணீர் அஞ்சலி

இந்தியாவில் சத்திர சிகிச்சையின்போது
எம்மை எல்லாம் துயரத்தில் ஆழ்த்தி விட்டுச் சென்ற
மானிப்பாய் பட்டின பொதுநூலக முன்னைநாள் நூலகர்
செல்வி மல்லிகாராணி கந்தசாமி
அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

தலைவர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்.

(சி/8271)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள லிஸ்ரர் (England — 10KV) செல்வ் ஸ்ராட் மொடல் எஞ்ஜினும், றொபின் (Japan — 1100) எஞ்ஜினும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜன் பஸ் நிலையம். அச்சுவேலி. (67596)

நல்ல நிலையில் உள்ள ரெமிங்டன், கல்டா தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. இராமச்சந்திரன், இல. 78, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (67612)

இத்தாலிய Vespa ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. எஞ்ஜின் மிகவும நல்ல நிலையில் உள்ளது. 286, ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலை முன்பாக, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (67635)

கொழும்பில் இருந்து பொருள்கள் வந்த வெற்றுக் ''காட்போட்'' பெட்டிகள் பல அளவுகளிலும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 39, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (67552)

## தவறிவிட்டன

இராஜகாரியார்வீதி, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் விலாசத்தில் வசிக்கும் த. சிவரத்தினம் என்பவரது தேசிய அடையாள அட்டை (362401526V), சி. தவமணி தேவி என்பவரது தேசிய அடையாள அட்டை (457760663V), சி.சிறிவதனி என்பவரதுதேசியஅடையாள அட்டை (708242578V) விசேட அடையாள அட்டை (0905023843) என்பன ஒன்றாக மானிப்பாய் உடுவில் வீதியில் 19-07-99இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். (67637)

## தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்லவிலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம் (19, முருகேசர் ஒழுங்கை நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67579)

## புறோயிலர் குஞ்சுகள்

இன்று (23-07-99) மாலை புறோயிலர் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க விலை பத்துரூபாவால்குறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (67633)

## விவாக சேவை

சைவ, அசைவ, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களைத் தேர்ந்தெடுக்க மாவை விநாயகர் விவாக சேவை. புதன்கிழமை — 111/3, கோயில் வீதி, நல்லூர். ஞாயிறு — மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடம். (67568)

## படிவம்

விஞ்ஞான, வணிக பட்டதாரி ஆசிரியர்களைத் தேசிய பாடசாலைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. விண்ணப்ப முடிவு திகதி 1999- 07- 30 படிவம் ஒன்றின் விலை ரூ. 5.00 மட்டுமே. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/8201)

## வீடு விற்பனைக்கு

இல. 272, ஆனந்தன் வடலி வீதியில் உள்ள 8 பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணியும் செம்மணி வீதியில் 8 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோ. சிற்றம்பலம் 272, ஆனந்தன்வடலி வீதி (A. V. Road), அரியாலை, யாழ்ப்பாணம். (67634)

# சித்திரத்தேர் அமைப்பாளர்களே!

கரவெட்டி தச்சந்தோப்பு
விநாயகருக்கு சித்திரத்தேர்
செய்ய விரும்புகிறோம்.

இது சம்பந்தமாக தேர் செய்யும் ஸ்தபதிகள் எம்மோடு 05 - 08 - 1999 க்கு முன் கடித மூலம் தொடர்பு கொண்டு உதவ வேண்டுகிறோம். நேரில் வந்து கலந்துரையாட முடியுமானாலும் நாம் சம்மதமுடையோம்.

தலைவர்
ஆலய பரிபாலன சபை.

கரவெட்டி. (சி/8267)

# இதோ விற்பனைக்கு!

## யாழ்க்கோ பட்டர்

எமது சங்கத்தின் உன்னதமான உள்ளூர்த் தயாரிப்பு
சர்வதேச தரத்திற்கு நிகரானது.

80 கிராம் கப் ஒன்றின் விலை
ரூபா 25 மட்டுமே

110 கிராம் பக்கட்டின் விலை
ரூபா 45 மட்டுமே

சிக்கனமான விலை; சிறந்த தரம்
உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளியுங்கள்;
யாழ்க்கோ பட்டரை வாங்கிப் பாவியுங்கள்.

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

[சி/8270[

# வலி. கிழக்கு பிரதேசசபை நீர்வேலி
# மீன் கேள்வி அறிவித்தல் - 1999

1. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 02-08-1999 நண்பகல் 12.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 03-08-1999 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 03-08-1999 பிற்பகல் 2.00 மணி
4. கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
5. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 50.00 | 100.00 | 2000.00 |
| **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 25.00 | 50.00 | 200.00 |
| புத்தூர் மாட்டிறைச்சிக் கடை | 50.00 | 150.00 | 13,500.00 |
| வாதரவத்தை மாட்டிறைச்சிக்கடை | 25.00 | 50.00 | 500.00 |
| புத்தூர் ஆட்டிறைச்சிக் கடை | 25·00 | 50.00 | 500.00 |
| ஆவரங்கால் மீன் சந்தை | 25.00 | 50.00 | 300.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 50.00 | 150.00 | 10,000.00 |
| உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 50.00 | 150.00 | 10,000.00 |

பூ. குணசிங்கம்
தவிசாளர்

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
21—07—1999

(சி/ 8257)

# யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை
# கேள்வி அறிவித்தல்

01. வீரசிங்க மண்டபக் கூரைக்கு இரும்புச் சட்டம் ஒட்டி மண்டபக் கூரையில் ஏற்றுவதற்கும்,
02. வீரசிங்க மண்டபத்தின் நிலை, யன்னல், கதவு செய்வதற்கும் கேள்விக்கூறு கோரப்படுகின்றது.

விண்ணப்பிக்க விரும்புவோர் சபையின் வேலை விவரத்தைப் பெற்று ரூபா 1,000 மீளளிக்கப்படும் வைப்புப் பணமும், விண்ணப்பப்படிவத்திற்கு ரூபா 100 உம் செலுத்தி 30 - 07 - 99 இற்கு முன்னதாக

''மாவட்டச் செயலாளர்,
இல, 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்''
என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

மாவட்டச் செயலாளர்.

[சி/8258]

# பாராட்டுகிறோம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் 1998 ஆம் ஆண்டு சுருக்கெழுத்தாளர் பயிற்சி பெற்று, 1998 மார்கழி மாதத்தில் நடைபெற்ற க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சுருக்கெழுத்து தட்டச்சுப் பாடத்திற்கு தோற்றி சித்திபெற்றவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம்.

## தமிழ்மொழி மூலம்

| | | | |
|---|---|---|---|
| ந. ஜானகி | | வதிரி | டி |
| இ. ஜெயந்தி | * | உடுப்பிட்டி | டி |
| த. சுதாஜினி | * | கம்பர்மலை | டி |
| க. ஒபீக்கா | | கரவெட்டி | டி |
| ம. செல்வரஞ்சினி | | இமையாணன் | டி |
| தே. சுகன்யா | | இமையாணன் | டி |
| க. ரஜனி | | இமையாணன் | டி |
| க. சுபாஜினி | | இமையாணன் | டி |
| தே. சுகுணா | | இமையாணன் | டி |
| சோ. தமயந்தி | | பொலிகண்டி | டி |
| தி. ஜெயரஞ்சினி | | தொண்டமானாறு | டி |
| கு. சுதர்சன் | | உடுப்பிட்டி | டி |
| பு. ரமேஸ்வரன் | | உடுப்பிட்டி | டி |
| வீ. திவ்வியநாதன் | | வதிரி | டி |
| ப. மனோகரன் | * | பொலிகண்டி | டி |
| க. வசந்தி | | உடுப்பிட்டி | டி |
| க. சாரதா | | கரவெட்டி | டி |
| பா. சந்திரலதா | | திக்கம் | டி |
| ந. நந்திகா | | வதிரி | டி |
| ந. விஜிதா | | வதிரி | டி |
| ஆ. சகுந்தலா | * | வல்வெட்டி | டி |
| ஜெ. வானதி | * | கெருடாவில் | டி |
| ஐ. கௌரி | * | கரவெட்டி | டி |
| கி. பவந்தி | * | வதிரி | டி |
| தி. சுனிதா | * | வதிரி | டி |
| கி. அருளரசி | * | வல்வெட்டித்துறை | டி |
| யோ. ச. சத்தியநாதன் | * | வதிரி | டி |
| அ. வசந்தன் | * | வதிரி | டி |
| ப. மோகனதாஸ் | * | உடுப்பிட்டி | டி |
| சி. கபிலன் | * | வதிரி | டி |
| வீ. கிரிதரன் | * | வதிரி | டி |
| சி. சிவகுமார் | * | தம்பசிட்டி | டி |
| சி. சிவகுமார் | | வதிரி | டி |
| ப. வாசுகி | * | புலோலி | டி |
| சி. சிவந்திளி | * | தம்பசிட்டி | டி |
| க. மதிவதனி | * | புலோலி | டி |
| ம. செல்வச்செல்வம் | | அல்வாய் | டி |
| சி. நளாயினி | | கரவெட்டி | சி |
| ந அன்பரசி | | பொலிகண்டி | சி |
| ஜெ. கயல்விழி | | பொலிகண்டி | சி |
| க. மாதவன் | * | கரணவாய் | சி |
| தெ. கீதாஞ்சலி | * | கெருடாவில் | சி |
| ச. தாரணி | * | வதிரி | சி |
| க. குகாஜினி | * | அல்வாய் | சி |
| ப. கல்பனா | | பொலிகண்டி | சி |
| ந. பவானி | | அல்வாய் | சி |
| தி. கீதா | | வதிரி | சி |
| ம. அகிலா | | திக்கம் | சி |
| க. சுகன்யா | | தம்பாலை | சி |
| பா. குமுதவல்லி | | கரணவாய் | சி |

## ஆங்கில மொழி மூலம்

| | | | |
|---|---|---|---|
| பா. பானு | * | கரணவாய் | டி |
| க. ரேணுகா | | வல்வெட்டித்துறை | சி |

❀ இவர்கள் தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் பயின்றவர்கள்,

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்.
**வதிரி, கரவெட்டி.**

(சி/ 8268)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் சகல இடங்களிலும் மின்மானிகள் பொருத்தப்படும்

## சிவில் நிர்வாக அலுவலக கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

மின் மானி இல்லாத இடங்களில் மின் மானிகள் பொருத்தப்பட்டு கூடுதலாக மின் கட்டணங்கள் அறவிடப்படுவது தவிர்க்கப்படவுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் எம். முத்துரட்னானந்தம் தெரிவித்துள்ளார்.

யாழ்.சிவில்நிர்வாக அலுவலகத்தில் மின்சார விநியோகம் தொடர்பாக சிவில்நிர்வாக அதிகாரி பிரிகேடியர் ரி. ஈ. திலகரத்னா வினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இந்த மாநாட்டில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு பிரதிநிதிகளான சு பரமநாதன் வணபிதா ஜே. பி. ஈ. செல்வராஜா, யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் பி. விக்கினேஸ்வரன், இணைய நிர்வாகஉத்தியோகத்தர்என். சோதிநாதன், மின்சாரசபை பொறியியலாளர் எஸ்.வல்லிபுரம் மற்றும் சிவில் நிர்வாக அலுவலகத்தைச் சேர்ந்த லெப். சேணல் எம். சூரியாராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் மின்சாரக் கட்டண அறவீடு, மின்சார இணைப்பு, மின்தடை மற்றும் மின்மானிகள் அமைப்பது சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டது.

மின்சார சபையில் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் மாநாட்டில் மேலும் கூறியதாவது:—

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பிரிட்டனினால் வழங்கப்பட்ட ஆறாயிரம் மின்மானிகளும் யாழ்ப்பாணத்தில் பொருத்தப்பட்டு விட்டன. மேலும் 6 ஆயிரம் மின்மானிகள் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்காகக் கொழும்பில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் உள்ளூராட்சிச் சபைகளினால் பொருத்தப்பட்ட மின்மானிகளைத் திருத்தி அமைப்பதற்கு யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களிலும் இரு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதிகமான பொதுமக்கள் அதிகரித்த மின்கட்டணம் அறவிடுவதாகக் கூறுகின்றார்கள். ஆனால் 1990 ஆம் ஆண்டு அறவிட்ட கட்டணத்துக்கும் தற்போதைய கட்டணத்துக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன — என்றுஅவர் கூறினார்.

கொழும்பில் வைக்கப்பட்டுள்ள 6 ஆயிரம் மின்மானிகளையும் விரைவில் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைப் பிரிகேடியர் திலகரத்ன செய்துதர வேண்டும் என்று அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள் வலியுறுத்தினார்கள்.

மின்மானிகள் திருத்துவதற்குக் கூடிய ஆட்களை நியமித்தல் வேண்டும் என்றும்—

மின்மானிகள் இல்லாத இடங்களில் அறவிடப்படும் யாதாந்த மின்சாரக் கட்டணம் மின் பாவனைக்குக் கூடுதலாக அறவிடப்படுகிறது என்றும்— இவர்கள் சுட்டிக்காட்டினர். (இ—5—ரி)

## வாதுவவில் கார்கள் வந்தன

வடமராட்சி, ஜூலை 23

யாழ். ஆயர் இல்லத்துக்கும் தனியார் ஒருவருக்குமாக இரு கார்கள் 'வாதுவ' கப்பலில் எடுத்துவரப்பட்டன.

பல்வேறு அத்தியாவசியப் பொருள்களுடன் பருத்தித்துறை வந்து சேர்ந்த இக் கப்பலிலிருந்துஇரு கார்களும் இறக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (ஐ–173)

## பொருளியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வணிக மாணவர் மன்றத்தினால் நடத்தப்படும் பொருளியற் கருத்தரங்கு இன்றும் நாளையும் பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ''நடைமுறை விடயங்களும் பரீட்சை வழிகாட்டலும்'' எனும் பொருளில் வே. கருணாகரன் கருத்துரை வழங்குவார். (ஐ-9)


நல்லை ஆதீனம்

**ஞானசம்பந்தர் பாலர் பாடசாலை**

**விளையாட்டுப் போட்டி**

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நாள்: 24 – 07 – 1999 (சனிக்கிழமை)
நேரம்: காலை 9. 00 மணி

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

ஆதீனமுதல்வர் அருள் ஆணைப்படி
மேலாளர்.

நல்லூர். [67616]



**NEW SCIENCE COLLEGE**
JAFFNA

**2000 A/L Physics**

திரு. சம்பந்தன் B. Sc

- Heat – சனி, ஞாயிறு -- 9.00 – 10.00 A. m.
- Geometrical Optics
  செவ்வாய், வியாழன் -- 6.30 – 7.30 A. m.

[67639]



**அறிவித்தல்**

NEW SCIENCE HALL
NEW SCIENCE COLLEGE
JAFFNA.

24-07-99 சனிக்கிழமை (மட்டும்) பாடசாலைகள் நடைபெற இருப்பதால் எமது சகல வகுப்புக்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

(67640) - நிர்வாகி


## நீங்காத நினைவில் ஓராண்டு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 — 03 — 1940 | 03 — 08 — 1998 |

**அமரர் பொன்னுத்துரை நித்தியானந்தன்**
(பிரதம எழுதுவினைஞர், மானிப்பாய் பிரதேச செயலகம்)

திதி: 23 – 07 – 1999

ஆண்டொன்றென்ன ஆயிரம் கடந்தாலும்
ஆறாது எம் நெஞ்சில் துயரலைகள்
ஆருயிரே எங்கள் அப்பா!
ஆறாத்துயரில் எம்மையெல்லாம் விட்டுவிட்டு
மீளாத் துயில் கொண்டு விட்டீர்களே?

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி,
பாசமிகு பிள்ளைகள்.

திருநெல்வேலி, தெற்கு.

(67643)

# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

# கேள்வி அறிவித்தல்

## அச்சுவேலி பொதுச்சந்தையில் கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 02 – 08 – 1999 நண்பகல் 12–00 மணி வரை.
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 03 – 08 – 1999 நண்பகல் 12–00 மணி வரை.
03 கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 03 – 08 – 1999 பி. ப. 2-00 மணி.
04. கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
05. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| அச்சுவேலி உப அலுவலகம் | | | |
| 1) அச்சுவேலி நவீனசந்தைக் கட்டடத் தொகுதி 12ஆம் இலக்கக் கடைகள் | 250/– | 2,000/– | 40,000/– |
| 2) அச்சுவேலி நவீனசந்தைக் கட்டடத் தொகுதி 13 ஆம் இலக்கக் கடை | 250/– | 2,000/– | 40,000/– |
| 3) அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடைக்கு அருகில் உள்ள 18 ஆம் இலக்கக் கடை | 250/– | 2,000/– | 20,000/– |

பூ. குணசிங்கம்
தவிசாளர்

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
21 - 07 - 1999.

## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 — 05 — 1931 | 03 — 08 — 1998 |

**அமரர் பெரியதம்பி தம்பிஐயா**
(யாழ். பொடி சின்னத்தம்பி)

திதி: 23 – 07 – 1999

ஆண்டு ஒன்று போனாலும் எம்
நினைவில் என்றும் நிலைத்து நிற்கும்
அன்புத் தெய்வமே ஐயா!
மாசிலா உங்கள் அன்பை
நித்தமும் நினைத்து ஏங்குகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகள்மார்,
மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

தகவல்:
திரு, திருமதி. சேதுகாவலர்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(67625)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூ பிறைற் கல்வி நிலையம்

(யா / மாட்டின் வீதி)

ஆண்டு 9, 10, 11 (O/L)

| | |
|---|---|
| விஞ்ஞானம் : | திரு. சந்திரன் |
| கணிதம் : | திரு. அருள்நேசன் |
| தமிழ் : | திரு. ராஜா |
| சமூகக்கல்வி : | திரு. திருச்செல்வநாதன் |
| வர்த்தகம் : | திரு. இராஜ்கலிஸ்ரஸ் |
| சித்திரம் : | திரு. றுக்ஷான் |

மீட்டற் பயிற்சிகள்
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி

(67613)

# 31-ம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 – 11 – 1924 | 19 – 06 – 1999 |

அமரர்

## கனகரத்தினம் சேனாதிராஜர்

(ஓய்வு பெற்ற பிராந்திய அதிகாரி (R A O) தபால் தொலைத் தொடர்புத் திணைக்களம்)

மண்ணுக்கு விதையாகி
மனதிற்குச் சுமையாகி - எம்
கண்ணுக்குள் நித்தமும் ஒளியாகிக்
காட்சி தரும் தூயவனே!
என்றென்றும் நிலைத்திருக்குமையா
ஏற்றந் தரும் உம் நினைவுகள்

எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் நேரில் கலந்து கொண்டும் அனுதாபச் செய்திகளை அனுப்பியும் எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் இல்லத்தில் நாளை சனிக்கிழமை (24-07-99) நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

திருமதி ஜே. சேனாதிராஜரும்
குடும்பத்தினரும்.

கே. கே. எஸ் றோட்,
மல்லாகம்.

(67607)

## விளையாட்டு நிகழ்வு

அராலி ஏ எல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் அராலி குலனையர் மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் கால் இறுதி ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ அராலி திருமகள் வி க. எதிர் இளவாலை ஹென்றீஸ் வி. க. அணி.

★ திருநெல்வேலி ஒலிம்பிக் வி. க. அணி எதிர் அராலி சுப்பஸ்ரார் அணி. (ஐ-17)

## கணக்காய்வுப் பயிற்சி நெறி

அரியாலை, ஜூலை 23

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய வங்கிகளின் முகாமையாளர்கள், உள்துறைக் கணக்காய்வாளர்கள், வங்கிச்சேவை முகாமையாளர்கள் ஆகியோருக்கு உள்துறைக் கணக்காய்வை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தல் சம்பந்தமான பயிற்சி நெறி ஒன்று விரைவில் நடத்தப்பட உள்ளது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களமும் கிராமிய வங்கிகளின் சமாசமும் இணைந்து இந்தப் பயிற்சி நெறியை எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-17)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படும் மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

புதிதாக உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களாகச் சேர விரும்புவோரும் இதில் பங்குபற்றலாம் என மேற்படி சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

★ ★ ★

வட. இலங்கை சங்கீத சபையின் ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றும் இது வரை ஆசிரிய நியமனம் வழங்கப்படாதவர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளதாக மன்றச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-9)

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 – 06 – 1940 | 23 – 07 – 1985 |

திருமதி

## லூட்ஸ் மார்கிறெட் றோஸ் தேவதாஸ்

(சரோஜினி)

மறப்போமோ நாம்?
எங்களரும் முதுசொத்தாய் இனிக்குந் தேனாய்
இதயமெலாம் பால்வார்த்து வளர்த்த தாயே!
தங்கமலர் அடியிணையில் தலையைச் சாய்த்துத்
தாய்மைக்குக் கடனாற்றும் தவத்தைச் செய்தே
பொங்கியெழும் அன்பினிலே அணைத்தே நெஞ்சம்
பூரிக்கக் காத்திருந்தோம் போய்விட்டாயே!
மங்களஞ்சேர் வானுலகில் இறையோன் பாதம்
மகிழ்ந்தொளிர்வாய் மண்ணகத்தே
மறப்போமோ நாம்?

பிரிவின் துயரால் உருகும்
குடும்பத்தினர்

25/1, சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம்.
Melbourne,
Australia.

(67636)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி வேலும்மயிலும் சிவமணியம்மா

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1922-05-22 (வல்வை) | 1999-06-24 (இந்தியா) |

எம் அன்புத்தாயே! நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வல்வை முத்துமாரித் தாயை வேண்டுகின்றோம் எங்கள் துன்பத்திலும், இன்பத்திலும் எம்மை அன்போடும் பாசத்தோடும் வளர்த்தீர்கள் அம்மா! கடைசி நேரத்தில் நாம் மூவர் உங்களைப் பார்க்க முடியாத பாவிகளாகித் தினந் தினம் கண்ணீர் வடிக்கின்றோம்.

குன்னூரில் காலமாகிச் சென்னையில் மூத்த மகள் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் வன்னியில் இளைய மகளுடன் துக்கம் அனுஷ்டித்த அனைவருக்கும் பிறந்த மண்ணில் எமது துக்கத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும், லண்டனில் இளையமகன், பேர்த்தி இல்லத்தில் துக்கந்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகள் பல தெரிவிப்பதுடன், வல்வையில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்

பிள்ளைகள்;
யோ. மாணிக்கரத்தினம் (இந்தியா),
வே. சரவணமுத்து (வல்வை),
யோ. நரகரெத்தினம் (வன்னி),
வே. சௌந்தரராஜன் (லண்டன்).

தகவல்: சித்திரம்
(வல்வெடித்துறை).

(67624)

# சாவகச்சேரி பிரதேசசபை - கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் அரசாங்க திணைக்களங்களில், இக்ராட் நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து 05-08-1999ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் இந்தக் கேள்விகள் 05-08-1999 அன்றே நண்பகல் 12 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளி தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை ''தலைவர், சாவகச்சேரி பிரதேசசபை'' கொடிகாமம். என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை 'பி. உ. உ ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கும் 05-08-1999 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர் | வைப்புப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. கொடிகாமம் சந்தை திருத்த வேலை | 5,000/- | 500/- |
| 2. எழுதுமட்டுவாள் ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடம் அமைத்தல் | 5,000/- | 500/- |

மேற்படி மீளளிக்கக்கூடிய வைப்புப்பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுந்துவதன்பேரில் 23-07-1999 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் 30-07-1999 ஆம் திகதி பிற்பகல் 4 மணிவரை எம்மால் வழங்கப்படும்- படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவல்க நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அன்ரன் பொன்னையா**
தலைவர்
சாவகச்சேரி பிரதேச சபை.

சாவகச்சேரி பிரதேச சபை,
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
21-07-1999

(சி/8266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அன்று போல் இன்றும்...

இன்று ஜூலை 23ஆம்நாள். இந்த நாட்டு அரசியலில் மறக்க முடியாத நாள் 23 ஆம் திகதி. யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் 13 இராணுவத்தினர் கண்ணி வெடித் தாக்குதலில் கொலையுண்டதை அடுத்து தென்னிலங்கையில் கறுப்பு ஜூலை ஒன்று உருவாக்கப்பட்டது. தமிழர்கள் காட்டுமிராண்டித் தனமாகக் கொலை செய்யப்பட்டதோடு அவர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டன;நாசமாக்கப்பட்டன.

தெற்கில் ஜூலை 24 ஆம் திகதி இரவு முதல் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை மட்டுமன்றி எதிர்காலத்தில் அவர்கள் மீது அவிழ்த்து விடப்படவுள்ள இராணுவ அடக்கு முறையையும் அரச பயங்கரவாதத்தையும் துலக்கமாகச் சுட்டி நின்றது; மிகத் தடிப்பாகக் கோடிட்டுக் காட்டியது,

கறுப்பு ஜூலைத் தாக்குதல் இன உணர்ச்சியால் தூண்டப்பட்டோ அல்லது ஆத்திரமூட்டப்பட்டதாலோ உடனடியாக வெடித்த ஒன்றல்ல தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை முளையிலேயே மிதித்து நசுக்கிவிடும் திட்டமிட்ட தாக்குதல் இனிமேல் என்ன நடக்கும் என்பதை தமிழர்களுக்கு உணர்த்தும் அல்லது வெளிப்படுத்தும், பயமுறுத்தும் ''கலவர''மாகவும், அது அமைந்தது.

பதினாறு வருடங்கள் கழிந்தும் அதன் தாக்கம், பதிவு இன்னும் அழியவில்லை. அதன் விளைவுகளில் ஒன்றே இன்றைய போர்.

கறுப்பு ஜூலை சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் பெரும் அபகீர்த்தியையும் அவமானத்தையும் தேடிக்கொடுத்தது. பெரும் தலைகுனிவையும் உண்டாக்கியது. அதனால் சில வருடங்களுக்கு மட்டும் கழிவிரக்கம் கொண்ட சிங்கள மக்கள் இப்போது அதனை மறந்து விட்ட நிலையில் உள்ளனர்.

கறுப்பு ஜூலைக்குத் துணைபோன பேரினவாதம் சில காலத்துக்கு அடங்கிக் கிடந்து விட்டு, பதுங்கி இருந்துவிட்டு, இப்போது மீண்டும் பலவடிவங்களில் தலையெடுத்துள்ளது.

இந்த நாடு 'சிங்களே' என்று அழைக்கப்பட வேண்டும். சிங்கள மக்களே இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் நிரந்தர குடியிருப்பாளர்கள் ஏனைய எல்லோரும் வாடகைக்குக் குடியிருப்பவர்களே என்று ''சிங்கள வீரவிதாஹன'' இயக்கத்தின் நான்காவது வருடாந்த மகாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய அமைப்பு, சிங்கள ஆணைக்குழு என்று பல வடிவங்களில் பேரினவாதம் மீண்டும் கிளம்பியுள்ளது.

20 வருடகாலத் தொடர் அவசர காலச்சட்ட அமுல் ஊடாக வடக்கு — கிழக்கு வாழ் தமிழர்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமத்தப்பட்ட அடக்குமுறை போதாது என்ற தொனியிலும் —

தென்னிலங்கையில் வாழும் தமிழர்களுக்குக் கொடுக்கப்படும் தொல்லைகள் போதாது; அவர்கள் அங்கு தொழில் செய்து பணம் சம்பாதிக்க (சிங்களவர்களைச் சுறண்ட) இடங்கொடுக்கக்கூடாது என்ற தொனியிலும் — பேரினவாதம் மீண்டும் உரத்துப் பேசுகிறது.

இன்றைய இந்த நிலை 1983 க்கு முந்திய காலத்தைப் பெரிதும் ஒத்திருக்கிறது. அதாவது தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்கும் அவர்களது அரசியல் அபிலாசைகளை நல்லெண்ணத்துடன் அங்கீகரிக்கும் நிலை தெற்கில் உருவாகும் சாத்தியம் குன்றிப் போகும் என்பதனையே இது கட்டியம் கூறுவதாக உள்ளது.

---

# மணமக்களுக்குரிய அறுகரிசி ஆசீர்வாதத்தில்

# சரியானது ஆரோகணமா? அவரோகணமா?

அறுகரிசி போடுவது தலையில் இருந்து பாதங்களை நோக்கிச் செய்யப்படுகிறது. அது தவறு. ஆரோகணக் கிரம ஆசீர்வாதம், அவரோகணக்கிரம ஆசீர்வாதம் என இரு வகைகள் உண்டு. ஆரோகணக் கிரம ஆசீர்வாதம் பாதங்களில் இருந்து முழங்கால், தொடைகள், தோள்களின் பின்னரே தலையில் அறுகரிசியிடலாகும்.

யாட்டு விழாக்கள் நடைபெறும் இடமாக மாறிவருகின்றன.

ஆலயங்களில் நித்திய, நைமித்திய, காமிய பூசைகள் ஒழுங்காக இடம்பெறவேண்டும். பரார்த்த பூசை, ஆத்மார்த்த பூசைகளினால் நாடும் நாமும் அமைதியுடன் வாழ முடியும். புதிய கோயில்களை அமைப்பது சிவாச்சாரியார்களால் தடை

வடிவத்தில் உள்ளான். இந்த நிலையில் எமது பெண்களுக்கு பண்பாட்டில் உயர் நிலை வழங்கி முக்கியத்துவம் அளிக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது.

### தீட்சை பெறாதவருக்கு அனுமதி இல்லை

அபரக் கிரியைகள் இறந்தவர்களுக்காக மட்டும் செய்யப்படுவதில்லை. ஆத்மாவின

## சமயக்கிரியைகளில் ஒழுங்கு பிரதானம்; இந்து சமயக்கருத்தரங்கில் சான்றோர் கருத்து

தலையில் இருந்து காலுக்குப் போவது அவரோகணக் கிரமமாகும். எங்களது பிரார்த்த விதியிலும் தேவர்களையும் ஆவாகனம் பண்ணும்போது ஆரோகணக் கிரமத்திலும் ஜீவபிதிர்களை ஆவாகனம் பண்ணும்போது அவரோகணக் கிரமத்திலும் பண்ணப்படுகிறது.

எனவே தலையில் இருந்து போடுவது அவரோகணக் கிரமம் என்பதால் உயிருடன் இருப்பவர்களுக்கு அப்படிச் செய்யக்கூடாது.

அறுகரிசியிடும் முறை பற்றிய வினாவுக்கு இது விடையாக அமைகிறது.

ஆயிரம் காலத்துப் பயிரான திருமணம் இன்று ஒரு கருத்தற்ற பொருளாகி விட்டதாகவும் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணங்கள் இன்று ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுவதால் இந்தச் சடங்குகள் குறித்து விவரிப்பது எப்படி என்ற ஆதங்கத்தையும் கேட்க முடிந்தது.

### நிறையப் பிள்ளைகள் பெறவேண்டும்

பிராமணர்களைப் பொறுத்தவரை ஏனையோருக்கும் அவர்களுக்குமிடை

செய்ய முடியாது. ஆனால் பழைய கோயில்களைப் புனரமைப்பதில் கிராமத்தவர்கள் கரிசனை கொள்வது அவசியம்.

கலைகள் கலைக்காக மட்டும் அல்ல தெய்வ பக்தி, ஒழுக்கம் ஆகிய உயர் நிலைகளையும் வளர்க்கிறது. பரத நாட்டியக் கலைகளின் அனுபவங்கள், கண்ணசைவு, முத்திரைபோன்ற பாவங்கள் சிவாச்சாரியார்களின் செயல்களிலும் காணப்படுகின்றன.

தும் குடும்பத்தினதும் வளத்துக்குமாகவே செய்யப்படுகின்றது எனவே சித்த சுத்தி இருத்தல் வேண்டும்.

சைவசமயிகள் கட்டாயமாகத் தீட்சை பெற்றிருக்க வேண்டும் தீட்சை பெறாதவர்கள் எந்தக் கிரியைகளையும் செய்ய அனுமதி இல்லை. இறந்தவர்கள் தீட்சை பெறாதவர்களாயின் அவர்களுக்குக் கிரியைகள் செய்ய கூடாது. அபரக்கிரியை பிதிர்கழிய முக்கியம்.

யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா முன்னோடி நிகழ்ச்சித் தொடரில் ''இந்துக்களின் வாழ்வியல் நோக்கில் — கிரியைகளும் சடங்குகளும்'' — எனும் பொருளில் இந்து நாகரிகத்துறையினரின் கருத்தரங்கு கடந்த ஜூலை 18, ஞாயிறன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

சமூக நிகழ்வுகளில் வருகின்ற ஐயந்திரிக்கும் ஆன்றோர் அவையில் கலந்துகொண்டு கருத்துக்கள் வழங்கிய பல அறிஞர்களது கூற்றுக்களை வாசகர்களுக்குத் தொகுத்துத் தருகின்றோம்.

சமூகத்தில் நிலவும் பிரச்சினைகள் பல அன்றைய ஆய்வில் எடுக்கப்பட்ட போது — திருமணச்சடங்குகள், அபரக்கிரியைகள், ஆசிர்வாதம் செய்யும்முறை, ஆலய பூசை முறை, திருவிழா என்பனபற்றிக் கலந்துரையாடப்பட்ட வேளை வெளியான கருத்துக்கள் இங்கே அடங்கியுள்ளன.

### ஞானக் கதிர்

யில் கிரியைகளில் வித்தியாசம் உண்டு. திருமணத்தில் அவர்களது குறிக்கோள் நிறையப் பிள்ளைகளைப் பெறுவதே. ஒரு பிராமணப் பெண் பத்துப் பிள்ளைகள் பெற்றால்தான் நிறைவான செல்வம் பெற்றவளாகக் கருதப்படுவாள்.

இந்துக் கோயில்களை முன்னிலைப்படுத்தியே எமது பண்பாடுகள் வளர்ந்துள்ளது. ஆலயக் கிரியை வழிபாடுகள் சிறப்புற அந்தணர்கள், அறங்காவலர்கள், அடியார்கள் ஒன்றிணைந்த பணி இன்றியமையாதது. கால ஓட்டத்தில் திருக்கோயில் வழிபாடுகள் தொடர்பான நெறிகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். நாயன்மார்கள் திருக்கோயில்களையே மையப்படுத்தி வழிபட்டனர். ஆனால் இன்று அவை களி

மேளவாத்தியத்தைத் தோளில் வைத்து ஒற்றைக் காலில் நின்றபடி அடிக்கும் பூத நாட்டியம் இப்போதும் கோயில்களில் இடம் பெறுகின்றது.

### நாதஸ்வரத்தில் சினிமாப்பாடல்கள்

ஆலயங்களில் கலை தொடர்பான கிரியைகள் பேணப்படுவதில்லை. நாதஸ்வரத்தில் சினிமாப்பாடல்கள் வாசிக்கப்படும் நிலை தவிர்க்கப்பட வேண்டும். ஆலயங்களில் சினிமாப் பாடல்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியாதா என்று வினாவப்படுகின்றது.

ஆலய அறங்காவலர்களும். அடியார்களுமே இதைச் செய்ய வேண்டும். ஆனால் அனேகர் சிறு சீட்டுக்களில் சினிமாப்பாடல்களை எழுதி அவற்றை வாசிக்குமாறு நாதஸ்வரம் வாசிப்பவரைக் கோருகிறார்கள் என்பதே உண்மை.

மங்கள காரியங்களில் குத்துவிளக்கு, நிறைநாளி என்பவற்றை ஏற்றவேண்டியவர்கள் பெண்களே.ஆனால் ஆண்களே இதனைச் செய்கிறார்கள். ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தில் புண்ணிய கருமங்களில் பண்களை ஓதுவதிலும் பெண்களே ஈடுபட்டு வந்தனர். இன்று அரசியல் நோக்குக்காக ஆண்களே மங்கள விளக்கேற்றுகிறார்கள் என ஆண்களின் மீது குற்றச்சாட்டும் வருகிறது,

மங்கையராகப் பிறக்க மாதவம் செய்திடவேண்டும் என்கிறார்கள், இறைவன் கூட அர்த்த நாரீஸ்வர

அபரக் கிரியைகளுக்கு முன் 'உக்குராந்தி' [உயிர்வெளிச் செல்லும் நிலை] கோதானம், இறக்கு முன் தசதானம் கொடுப்பது வாழ்வு சிறக்க உதவும். இறந்த உடலைச் சாணியால் மெழுகிய தரையில் தர்ப்பைப் புல்லிட்டு அதன் மேல் படுக்க வைப்பதால் கிருமிகள் உட்செல்லவோ வெளிபேறவோ மாட்டாது.

மரண வீட்டில் கலந்து கொண்டு பிரேதம் தூக்குதல், அதனுடன் செல்லுதல், எண்ணையிடல், ஏதாவது அந்துதல் இவை தொடக்குக்கு உரியனவாகும்.

இவர்கள் 31 நாள்களுக்குக் கோயிலுக்குச் செல்லவோ பூசைகளைக் காணவோ கூடாது பொதுவாக ஆசௌசம் உள்ள இடத்தில் தேவாரம் ஓதக்கூடாது.

கிரியைகளுக்கும் ஆலய பூசைகளுக்கும் நேரக்கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.இன்று ஆலய பூசைகளை இரவு ஒன்பது மணி வரை செய்தால் என்ன? என்று கேட்கப்பட்டுள்ளது. அது நாட்டின் சூழ்நிலையைப் பொறுத்ததாக இப்போது உள்ளது.

நேரகாலம் பிழைப்பதற்கு வீடியோ ஒரு காரணமாகி விட்டது.அனேகமாகவீடியோவுக்காகவே எல்லா நிகழ்வுகளும் என்ற நிலை உள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டியது.

வேத தோத்திரமும் திராவிட தோத்திரமும் நிறைவு பெற்றபின் தான் வாழ்த்துச் சொல்வது சரியா? அல்லது வேத தோத்திரமும் வாழ்த்தும் நிறைவான பின் திராவிட தோத்திரம் சொல்வது சரியா? என்பது குறித்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் பல மேடைகளில் பிரச்சினை எழுப்பியுள்ளார். அது பற்றி அத்துறை சார்ந்த நிபுணர்களைக் கொண்டு முடிவு

வழங்கப்பட வேண்டும் எனவும்—

மூலஸ்தானத்துக்கு உயர்வாகக் கும்பமேடைகள் இருக்கக்கூடாது; எனினும் சுவாமியை அப்படி வைத்துப் பூசைகள் செய்யலாம் எனவும்—

தேருக்குச் சுவாமியை அசைத்துக் கொண்டுவரும் முறை தற்போது ஆலயங்களில்இடம்பெற்றுவருகிறது.— அதுபற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது எனவும்—

ஆன்மா பிறப்பெடுப்பதால் இறந்தவர்கள் பிறந்திருப்பார்கள் அப்படிப்பட்ட நிலையில் பலர் தமது பெற்றோர்களுக்குத் திவசம் செய்கிறார்கள் (30– 40 வருடங்களாக). இது சரியா? எனக் கேட்கப்பட்டதற்கு எல்லோரும் பிறப்பார்கள் என்றில்லை திவசம் பெற்றோருக்கு மட்டும் செய்வதல்ல அது பெற்றோருக்கு அவர்களுடைய பெற்றோருக்கு என முதாதையர்களுக்காகச் செய்யப்படுவது

''யேகான மாதா-நபிதாக மித்திரா ந ஜாதிபாந்தபாகா பேசர் வே திருப்தி மாயாந் தொமயோ கிருஷ்ணா-னி குச உதகையிலே'' என்னும் மந்திரம் இதில் சொல்லப்படுகிறது. எள்ளும் தண்ணீரும் எல்லோருக்குமாகவே விடப்படுகிறது எனவும்—

வெளிநாட்டில் உள்ள ஒருவர் இங்கே இறந்த தமது பெற்றோருக்குக் கடமைசெய்யலாம் எனவும் ஐயந்தீர்க்கும் ஆன்றோர் அவைவிளக்கியது

சுமார் 60க்கும் அதிகமான வினாக்கள் விடுக்கப்பட்ட போதும் அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு அறிஞர்களின் உரைகளில் பதில்கள் இருந் ஏனைய சில ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட வேண்டியவை என்பதால் இது குறித்து மேற்கொண்டும்

தொகுப்பு:
**நெடுந்தீவு லக்ஷ்மன்**

கருத்தரங்குகள் நடத்தி சந்தேகங்கள் தீர்க்கப்படும் என பேராசிரியர் கோபாலகிருஷ்ணனும் உயர்பட்டப்படிப்பு ஆய்வுகள் பீடாதிபதி பேராசிரியர் சண்முகதாஸும் தெரிவித்தனர்

துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கூறியது போல் பல்கலைக்கழகம் இப்போது சமூகத்துடன் நெருங்கிய ஒன்றாக இருப்பதாலும் —

பல்கலைக்கழகத்தை 1974 இல் ஆரம்பித்து வைத்த சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்த நாட்டின் தமிழ், இந்துப் பண்புகள் ஆராய்ச்சிக்கான கேந்திர நிலையமாக இது அமையும் என்றுகூறியதுபோல எமது சமூகத்தின் பண்பாடு, கலாசார, அறிவியல்நிலைகளையாழ் பல்கலைக்கழகம் தொடர்ந்து முன்னெடுத்து தமிழர்களின் பெருமையை நிலைநாட்டும் முன்னோடி நிகழ்வாக இக்கருத்தரங்கைக்கொள்ளலாம்..

---

## மின்சாரம் துண்டிப்பு

தென்மராட்சி, ஜூலை 23

மிருசுவில் உசன், தவசிகுளம் ஆகிய பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சார விநியோகம் மாணவர்கள் படிக்கும் வேளைகளில் நிறுத்தப்படுவது குறித்து பெற்றோர் பலர் கவலை தெரிவித்தனர்.

உசன் கந்தசாமி கோயிலில் உள்ள ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் இரவு 7.00 மணிக்கு வழங்கப்பட்டு 7.30 மணிக்கு நிறுத்தப்படுவதால் மணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். (ஐ-117)

---

## நாளை

ஆடி 08

சனிக்கிழமை

திதி: ஏகாதசி முற்பகல் 11.43 வரை.

நட்சத்திரம்: அனுஷம் முற்பகல் 7.28 வரை

சயன ஏகாதசி விரதம்

சுபநேரம்: 3.02—4.32

ராகுகாலம்:9.02—10.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனிதனுடைய மனம் இறைவனை நாடியிருக்கும் வரையில் அவன் உலக வாழ்க்கையாகிய கடலில் திசை தப்பிப் போவதில்லை.

- ஸ்ரீராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

உடுவில்

எஸ். மகேந்திரன் [097630 ஏ], ஆர். புவனேஸ்வரி [097630பீ], பீ. ராஜ ரட்ணம் [097635ஏ], ஐ. ராஜரட்ணம் [097635 பீ]. ஆர். கலையன் [097635 சீ], ரீ. சந்திரகுலம் [097726 ஏ], எஸ். சரணியா [097726பீ], எஸ். சஜிந்தன் [097726 சீ], எஸ். நடராஜா [097730 ஏ], எஸ். சிறிரஞ்சி [097738ஏ], கே. கனிஸ்ரஸ் [097743 ஏ], பீ. புஸ்பராணி [097747 ஏ], ஆர். நவரட்ணம் [097750 ஏ], என். கருணா கரன் [097750 பீ], எஸ். சிவநேசன் [097755 ஏ], ஆர். பாஸ்கரன் [097761 ஏ]; பீ.சின்னராஜா [099959ஏ], நாகேஸ்வரி [101697], ஏ. சஜிந்தன் [101807 ஏ[, பீ. டபிள்யூ. அரசரட்ணம் [101807பீ]எஸ். விநோகரன் [101812ஏ].

எஸ். விநோகரன் (10181 பீ,) என். கனகரத்னம் (101821ஏ), யீ. செல்லத் துரை (101832ஏ), ரீ. செல்வரட்ணம் (104082ஏ), ஏ. பிரேமானந்தன் (104084 ஏ), யீ. பவளமலர் (104087 ஏ), யீ. ஷகிலா (104087பீ), எஸ். ஐ. எஸ். சர்மா (107628ஏ), என். ராஜரட் ணம் (107643சீ), பீ. சிவபா லன் (107647ஏ), எஸ். சுபா கரன் (107649ஏ),

எம். ரமேஸ்குமார் (095587ஏ), எஸ். ரட்ண தேவி (097481ஏ), வீ. செந் தூரதேவி (099639ஏ), பீ. நாகேஸ்வரி (101074ஏ), எஸ். தம்பையா (101110 ஏ), எஸ். தம்பையா(101110 பீ), ஆர். யோகேஸ்வரி (101291ஏ), ஆர். எஸ். சாந்தினி (101291பீ), ஆர். ராமன் (101291சீ), ஆர். சுபா (10129டீ), ஏ. ஏ. கிறேசியன் (10133ஏ),

டீ. தவஅலங்காரம்[10133 பீ], எஸ். அந்தோனிப் பிள்ளை [10133சீ], வை. றோகினீஸ்வரி [101410ஏ], வை. மதுஷா [101410பீ], வை. மகிந்தன் [101410சீ], வீ. குலசிங்கம் [101437ஏ]. ஏ. தவமணி [101921ஏ], யூ.செல்லதுரை [101975ஏ], கே. நடராசா [102030ஏ], வீ. செல்வப்பரனா [102031 ஏ], எஸ். செல்லையா [102032ஏ],

எஸ். தவமணி(102032பீ), ஆர்.செல்லப்பா(102101ஏ), வீ. அன்னலக்சீ(102166 ஏ), பீ. சண்முகம் (103149 ஏ), எம். சண்முகம்(103149 பீ), பீ.சண்முகராசா(103253ஏ), வீ. சின்னையா (103256 ஏ), ஆர். சங்கரப்பிள்ளை (103259 ஏ), என். ராஜரட் ணம் (103265 ஏ), ஆக். அம் பிகாதேவி (103265 பீ),எஸ். குருமூர்த்தி (103269 பீ), ரீ குருமூர்த்தி (103269சீ ),

ர. சியன்ப (103272 ஏ), டபிள்யூராமபிள்ளை(103308 ஏ), ஆர். வரதராசா (103319ஏ,) கே. வரதராசா (103371 ஏ), சீ. மேசன் (103275 ஏ), எஸ். அரவிந் தன் (103389 ஏ), எம். கே. கேமநளினி (103389 பீ), ஏ. ஆராதனா (103389 சீ), டபிள்யூ குகவதன் (103398 ஏ), எஸ் பிள்ளைவேலு (103398 பீ), டீ பேடினற் (103402 ஏ), எஸ். வைர நந்து (103418 ஏ),

எஸ்.ராஜேந்திரன்(103426 ஏ), ஆர். வெள்ளமுகன் (103426பீ), ஆர் ரீ.பிள்ளை (103478ஏ), பீ.தாமோதரம் பிள்ளை (103478பீ) கே.கல் யாணசுந்தரம் (103487ஏ), வீ.குலசிங்கம் (103487பீ), என்.நவரட்ணம் (103522ஏ), எஸ்.மணிக்கவா (103548ஏ), வீ. சிவலிங்கம் (103562ஏ), ஆர்.சிவலிங்கம் (103562பீ), பீ.கனகரட்ணம் (103567ஏ), எஸ்.ராசலிங்கம் (103605பீ), வீ.தனபாலன் (103610ஏ),

ரீ.யோகேஸ்வரி (103610 பீ).ரீ.அனோஜா (103610சீ), ரீ.லவராஜா (103610டீ), கே.கணேந்திரன் (103615ஏ), கே.முருகையா (103654ஏ), எஸ். சிவகாந்தேவராஜன் (103663ஏ), ஜே. அற்பிரா கல் (103663பீ), ஏ மதுஜிந் (103563சீ).வீ.மாணிக்கவாச கர் (103670ஏ),என்.சர்வேஸ் வரன் (103980 ஏ), எஸ். பெனகதேவி (103687ஏ), பீ. சுசிலாதேவி (103701ஏ).

வீ. கந்தசாமி [103714ஏ], பீ. சண்முகவடிவேல்[103725 ஏ], எஸ். யோகாநந்தராசா [103729ஏ], ரீ. பாஸ்கரன் [105034ஏ], என். குசைப் பிள்ளை [105102ஏ], கே. குமாரலிங்கம் [105130ஏ], வீ.பன்னீர்ச்செல்வம்[105192 ஏ], ஐ.டீ அருள்ராஜா [105193ஏ], ஏ. தணிகாஷ் [105237ஏ], ஆர்.முருகையா [105237பீ], ஓ.விஸ்வலிங்கம் [105317ஏ], எஸ். ஜெக நாதன் [105495ஏ], எம். ஞானநந்தன் [105736ஏ].

யீ. கலையரசி [105736பீ], ஏ. நிவேந்தன் [105752ஏ], டபிள்யூ கதிரவேலு [105794 ஏ],பீ.இராசநாயகம்[105816 ஏ], பீ. சிவபாதசுந்தரம் [105855ஏ], டபிள்யூ கிறிஸ் கந்தராசா [105867ஏ], டபிள்யூநவமணி[105867பீ], டபிள்யூ ராஜதுரை [105929 ஏ], ஆர். நிரஞ்சன் [105929 பீ], டபிள்யூ தெய்வானை [105931ஏ], எஸ் சாந்தி [105031பீ], எஸ். தில்லை நாதன் [105944ஏ],ரீ.மகேஸ் வரி [105944பீ].

கே. தவமணி (105965 ஏ), கே. ரட்ணசிங்கம் (105965 பீ), ஆர் விஜிதா (105965சீ), ரீ. நிரோஜன் (105965 டீ), எஸ் மடீஜா (106080 ஏ), பீ. ரைராசா (106132 ஏ). என். தயாகரன் (106140 ஏ), கே. சிவபாலசிங்கம் (106217 ஏ), எஸ். சிவ தர்ஷனி (106217 பீ), எஸ். தயாநிதி (106217 சீ) ஆர். ஆனந்தலக்சுமி (106227 ஏ), எஸ். திருநாவுக்கரசு (106230ஏ). எஸ். சிவகுமார் (106230 பீ), எஸ். தனுஷ யன் (106230சீ), ரீ. சிவனிகை (107428 ஏ), என். மதனதாசீன் (108681 ஏ)என் லோகநாதன் 108720 ஏ), எஸ் ரஞ்சித் (108720 பீ), யீ. ராஜகுமார் (108720 சீ), ஆர், திருப்பரன் (108720 டீ),கே. ஜெகிந்தன் (108720 ஈ). எம். ஜெயபந்த குமரன் (108720 எவ்). எஸ் கமலமோகன் (108720 யீ) எஸ் ஜெயப்பிரசாந் [108720எச்], பீ, கிருஷ்ணர் [108721ஏ], எஸ். கிருஷ்ண ரங்கா [108721பீ], ஆர். ஜோர்ச் [108804ஏ], எஸ். சுபாஜினி [108804பீ], கே. சிவகுமன் [108804சீ], எஸ். அழகரத்னம் [108923ஏ], எஸ். மகாதேவன் [108937 ஏ], எம். கமலதேவி [108937 பீ], எம். ரசிகரன் [108937 சீ], டீ. புவனேஸ்வரி[109007 ஏ].

ரீ. நவினா [109007பீ], ரீ. தவமணி [109007சீ], எஸ். ராசதுரை [109022ஏ[, ஆர். சிவநாதன் (109022 பீ), எஸ். மதனராணி [109025ஏ], டபிள்யூ துரை ராசா [109055ஏ], எஸ். துரைராசா [109055பீ], கே. கமலாதேவி (109056ஏ), கே. திலகதேவி [109056பீ], ஆர். கந்தசாமி (109073ஏ), கே. சுகிலா (109073பீ), வீ. யோகராணி (109093ஏ). எம். ஜெயக்குமார் (109094 ஏ), பீ. சுயீபா (109095ஏ), பீ. சுஜாதா (109095பீ), பீ. சண்முகரட்ணம் (109100 ஏ), பீ. சண்முகரட்ணம் (109100பீ), ஆர். சங்கரப் பிள்ளை (103259பீ).

(ஐ-ரி)

(தொடரும்)

## சிறுவர் தினத்தை ஒட்டி கட்டுரை, சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 23 சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மனித உரிமைக ளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்கறிஞர்சங்கத்தின்சிறுவர் பிரிவு நாடளாவிய ரீதி யில் கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இலங்கைச் சிறுவர்களின் மத்தியில் சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் நோக் கில் நடத்தப்படும் இந்தப் போட்டிகள் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறவுள்ளன.

12 வயது முதல்15வயதுக்கு இடைப்பட்டவர்கள் கனிஷ்ட பிரிவிலும்—

16 வயது முதல் 18 வய துக்கு இடைப்பட்டவர்கள் சிரேஷ்ட பிரிவிலும்—

பங்கு பற்ற முடியும்.

கட்டுரை 'சமுதாயமும் சிறு வர் உரிமைகளும்' எனும் தலைப்பில் ஆயிரத்து 500 சொற்களுக்கு மேற்படாம லும்—

சித்திரம் ''எமது நோக்கில் சிறுவர் உரிமைகள்'' எனும் அமைப்பில் 24×18 அங்குல தாளிலும்—

வரையப்பட்டிருத்தல் வேண்டும்.

அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரால் உறுதிப்படுத்தப் பட்டு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம்15 ஆம் திகதிக்கு முன் னர் 'போட்டி அமைப்பாளர், மனித உரிமைகளுக்கும் அபி விருத்திக்குமான வழக்கறிஞர் சங்கம், 225 1/1, கொட்டா வீதி, கொழும்பு- 8' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிரந்தர நியமனம் கோரி வழக்குத் தாக்கல்

### தொண்டர் ஆசிரியர் சங்கம் முஸ்தீபு

கொழும்பு, ஜூலை 23 அகில இலங்கைத் தொண் டர் ஆசிரியர்கள் சங்கம் நாட் டில் உள்ள அனைத்து தொண் டர் ஆசிரியர்களையும் நிரந்த ரமாக்கக் கோரி அடுத்த மாதம் நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யப் போவதாகத் தெரிவித்துள் ளது

01-07-90 ஆம் ஆண்டு திகதியிடப்பட்ட அரசாங்க சுற்றறிக்கைக்கு அமைய தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கக்கோரி அகில இலங்கைத் தொண்டர் ஆசிரி யர் சங்கம் பல தடவைகள் அரசாங்கத்தை வலியுறுத்திய போதும் அதற்கு அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.எனவே இறுதியாக சங்கம் 01-07-90 ஆம் ஆண்டு திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கக் கோரி வழக் குத் தாக்கல் செய்யப்போவ தாக சங்கத்தின் செயலாளர் அனுர சேனரத் கனு ஆராச்சி தெரிவித்தார்.

இம்மாதம் 15 ஆம் திகதி இது தொடர்பாக தொண் டர் ஆசிரியர்களுக்கு விளக்க மளிக்கும் கலந்துரையாடல் ஒன்று கொழும்பு சேர் சிற்றம் பலம்காடினர் மாவத்தையில் அமைந்துள்ள அதன் காரியா லயத்தில் நடைபெற்றது

இக் கலந்துரையாடலில் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ளஆயிரத்துக்கு மேற் பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் தொண்டர் ஆசிரியர்கள் கலந்து கொண்டு தமது சேவையை உறுதிப்படுத்தும் வகையில் பாடசாலையில் வழங்கப்பட்ட கடிதங்களை யும் சான்றிதழ்களையும் நிர்வாகிகளிடம் கையளித்த னர்.

(ஐ-க)

## ஹெந்தல கப்பலில் சிமெந்து

வடமராட்சி ஜூலை 23 தனியாருக்கான சிமெந்து டன் 'ஹெந்தல' கப்பல் பருத்தித்துறை துறை முகத்தை வந்தடைந்துள் ளது.

சிமெந்து இறக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட் டுள்ளது. ஆயிரத்து 500 மெற்றிக்தொன் சிமெந்து க் கப்பலில் எடுத்து வரப்பட்டுள் ளது.

(ஐ-173

## மின் கட்டணம் செலுத்துவதில் நெருக்கடி

யாழ்ப்பாணம், ஜூலை 23 யாழ்ப்பாணத்திலுள்ள மக் கள் வங்கிக் கிளைகளில் காலை 9.30 மணிமுதல் நண் பகல் 12 மணிவரை மட்டுமே மின்கட்டணங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமென வங்கி நிர் வாகத்தினரால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னரும் பெரும் எண்ணிக்கையான மின்பாவனையாளர்கள் மின் கட்டணம் செலுத்துவதற்காக வங்கிகளில் நெருக்கடியுடன் திரும்புவதைக் காணக்கூடிய தாக இருக்கின்றது.

(ஐ-4)

## காங்கேசனிலிருந்து 10 பேர் அ்புரத்துக்கு

குடாநாட்டின் பல பகுதி களிலிருந்தும் படையினரால் கைது செய்யப்பட்டுக் காங் கேசன்துறை தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வர்களில் 10 பேர் அனுராத புரம் நீதிமன்றத்துக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப் பட்டனர்.

நேற்று முன்தினம் காங்கே சன்துறை தடை முகாமுக்கு விஜயம் செய்து அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை பார்வையிட்டுத் திரும்பிய யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீ தரன் இத்தத் தகவலைத் தெரிவித்தார்.

அனுராதபுரத்துக்கு அனுப் பப்பட்ட 10 பேரின் விவரம் வருமாறு:-

★ குமாரசுவாமி விஜய குமார் (வயது 23 — கச்சேரி நல்லூர் றோட்)

★ குலோத்துங்கன் ரமேஸ் (வயது 24 — மூத்த விநாயகர் வீதி, நல்லூர்)

★ குணரட்ணம் குணசீலன் (வயது 24 — புத்தூர் மேற்கு)

★ முடியப்பு விமலச்சந்தி ரன் (வயது 25— மத்திய கிழக்கு வீதி, குருநகர்)

★ பாலலிங்கம் நிரஞ்சன் (வயது 19 — குராவத்தை, சுன்னாகம்)

★ உருத்திரமூர்த்தி பேரின்ப மூர்த்தி (வயது 21 — சுன்னா கம்)

★ யோசெப் அமல்ராஜ் (வயது 20 — 2 ஆம் குறுக்குத் தெரு, குருநகர்)

★ தேவதாஸ் றொபின்சன் (வயது 23 — மத்திய கிழக்கு வீதி, குருநகர்)

★ தேவதாஸ் இமானு வேல் (வயது 19 — புதிய கூடந்தரை வீதி, குருநகர்)

★ தேவதாஸ் றெஜி னோல்ட் றெயி (வயது 26 — மத்திய கிழக்கு வீதி, குரு நகர்)

(இ-9)

## சுயமுயற்சிக் கடன்

சண்டிலிப்பாய், ஜூலை 23 வடலிபடைப்பு கிராம அலுவலர் பிரிவில் அங்கிகளுக் கான ஐ.நா. தாதரக நுண் கருத்திட்டத்தின் கீழ் 57 பேருக்கு சுயமுயற்சிக் கடன் விரைவில் வழங்கப்படவுள் ளது.

(ஐ-135)


## முக்கிய அறிவித்தல்

### அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

10 – 06 – 1996 இல்

வருமதி சென்மதி மீதிகளை உறுதிப்படுத்தல்

01-02-1993 தொடக்கம் 10-06-1996 வரை யிலான புத்தகங்களையும் ஆவணங்களையும் எமது சங்கம் 1995, 1996 இல் ஏற்பட்ட இராணுவ நட வடிக்கை காரணமாக இழந்துள்ளமையால் மேற்படி காலப்பகுதிக்கான கணக்காய்வினை பூர்த்தி செய்யும் முகமாக தற்போது கிடைக்கப்பட்ட பதிவுகள், ஆவ ணங்கள், தகவல்களின் அடிப்படையில் நிதிக்கூற்று ஒன்றினை தயாரிக்க வேண்டிய நிலையிலுள்ளோம். இந்நிலையில் மேற்படி காலப்பகுதியில் சங்கத்துடன் கொள்வனவு, கொடுத்தல் செய்துள்ளவர்கள் தமது வருமதி, சென்மதி மீதிகளை தயவுசெய்து சங்கப் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு 31-07-1999 -ற்கு முன்பு சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்,

தலைவர் / பொது முகாமையாளர்,
அரியாலை பனை, தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து).
இல. 15, நடுத்தெரு லேன்,
அரியாலை.

(சி/8269)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மத்திய கல்லூரி

## பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் - 1999

மேற்படி பொதுக் கூட்டம்
24 – 07 – 1999 சனிக்கிழமை
காலை 10-30 மணிக்கு
கல்லூரியின் தம்பர் மண்டபத்தில்
நடைபெறும்.

சகல பெற்றோர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம். கல்லூரியின் புனரமைப்புக்கு உதவ முன்வந்துள்ள ஜி. ரி. இஸட் நிறுவன அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் சமுகமளிக்க உள்ளனர்.

கே. உருத்திரசுந்தரம்
செயலாளர்

க. இராசதுரை
தலைவர்

(சி/8280)

## தீவக லயன்ஸ் கழகம்

இலவச பொது மருத்துவ சேவையும், பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனையும் திருமணப்பதிவும் நடைபெறும்.
இடம்:- அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்,
காலம்:- 25-07-1999 ஞாயிறு காலை 9-00 மணி

தீவக லயன்ஸ் கழகம்

விளம்பர அன்பளிப்பு
சாயிராம் தொலைத் தொடர்பகம்
யாழ்/பிறவுண் வீதி :- 021-2382, 021-2883
வேலணை :- 021-3015, 021-3050 (67658)

## கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் அறிவித்தல்

சிவில் நிர்வாக அனுமதியை பெறுவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் ஒப்படைத்தவர்கள் அதனை மீளப்பெற்று தனித்தனியே துணைவேந்தரிடம் உறுதிப்படுத்திய பின்னர் மீளக் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்
கலைப்பீட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

(67660)

KOBE KOBE KOBE KOBE KOBE
பணத்தை திருப்பி பெறும் உத்தரவாதம்
நம். 1
இலங்கையில் அதிகளவு விற்பனை
KOBE
UHF/VHF கலர் T.V பூஸ்டர்
• இலங்கை T.V சனல்களுக்கு ஏற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்டவை.
• வெவ்வேறு இடங்களுக்கு ஏற்றவாறு பொருத்தக்கூடிய 14 மாதிரிகள்
• விற்பனையின் பின்னர் சிறந்த விரைவான திருத்த சேவை
KOBE UHF அன்டனாக்கள் எல்லா UHF சனல்களுக்கும்
VHF அன்டனாக்கள் ரூபவாகினி, ITN சனல்களுக்கு
பூஸ்டர்கள் தெரிவு செய்ய 32 மொடல்கள்
சகல சனல்களிலும் பூரணத்துவமான படங்களுக்கு தனியான அன்டனாக்கள் பல பிரதேசங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. நாடுகள் பூராவும் பெற்றுக்கொள்ளப்படும்
விசேடமாக UHF / VHF பூஸ்டர்கள்
2 UHF IN PUT 2 VHF INPUT
ONE OUTPUT
அன்டனா நிபுணர்கள்:
LANKA NIPPON ANTENNA PVT LTD.
18, Keyzer Street, Colombo 11.
Tel: 324726, 437735, Fax: 437736
Finally it is KOBE you will settle for ........!
must be KOBE ......the Original
" நிப்போனின் " சகோதர நிறுவனம்
KOBE KOBE KOBE KOBE KOBE
சி/8273)

## சமய சந்நிதிகளில்

நீர்வேலி, ஜூலை 23
நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை தொடக்கம் நடைபெறுகின்றது. இதனை முன்னிட்டு தினமும் மாலை 6.00 மணிக்கு அமுதசுரபி கலாமன்ற பேச்சாளர் செல்வமனோகரனின் விசேட சொற்பொழிவு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. (ஐ-110)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 23
அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா, ஆடி ஏகாதசி தீர்த்தத்திருவிழா என்பன நாளை சனிக்கிழமை காலை8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-4)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா ஆண்டை ஒட்டி நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் பெண்கள் பிரிவு ஆட்டங்களில் பங்குபற்றவிருக்கும் அணிகளின் விவரம் வருமாறு:–
★ ஜெயபாரதி வி. க. அணி எதிர் சரஸ்வதி வி. க. அணி.
★ தென்றல் வி. க. அணி எதிர் யாழ். பல்கலைக்கழக அணி. (இ-3)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக விளையாட்டுஅவைபல்கலைக்கழக மைதானத்தில் நடத்தி வரும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:–
★ மாலை 4 மணி:- யாழ்ப்பாணக் கல்லூரி 'பி' அணி எதிர் பற்றீசியன் அணி.
★ மாலை 5 மணி:- ஓல்ட் கோல்ட்ஸ் அணி எதிர் கிறாஸ் கொப்பேர்ஸ் அணி. (இ-6)

## கந்தரநுபூதி தொகுப்பு

சுழிபுரம், ஜூலை 23
திருமுருக கிருபானந்தவாரியாரின் கந்தரநுபூதி விரிவுரைகளின் நான்காவது தொகுப்பு கிருபானந்தவாரியாரின் பிரதம சீடன் நடேசன் சிவசண்முகமூர்த்தியினால் வெளியிடப்பட்டுள்ளது.
கிருபானந்தவாரியாரின் கந்தரநுபூதி விரிவுரைகள் அனைத்தும் பத்துதொகுப்புக்களாக வழக்கம்பரை பஜனைச் சபையினரால் வெளியிடப்படவுள்ளன. இதன் நான்காவது தொகுப்பே பஜனைச் சபையின் சார்பில் ந. சிவசண்முகமூர்த்தியினால் வெளியிடப்பட்டுள்ளது.
பஜனைச் சபையால் இலவசமாக வெளியிடப்படும் இந்த வெளியீடுகளை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தியுடனும் பஜனைச் சபைச் செயலாளருடனும் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (அ-28)

## இன்று

நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க. பாடசாலையில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்பட உள்ளது (இ-51)

★ ★ ★

தென்னைப் பயிர்ச்செய்கை தொடர்பான கருத்தரங்கு இன்று மேலைப்புலோலி, தம்பசிட்டி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.
தென்னை அபிவிருத்திச் சபையினரால் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கின் போது தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பான ஒளிப்படமும் காண்பிக்கப்பட உள்ளது. (இ-15)

### பாதையை...

(முதலாம் பக்கத் தொடர்)
களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.
பட்டிப்பளைச் சந்தி, அரசடித்தீவு ஆகிய இடங்களில் இருந்து பேரணிகள் நடத்தப்பட்டன.
சுலோக அட்டைகளையும், கொடும்பாவிகளையும்எடுத்து வந்த பேரணியினர் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தை அடைந்து அங்கு ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்தனர்.
சுமார் 10 ஆயிரம் பேர் கலந்து கொண்ட இந்தப் பேரணி முடிவில் ஜனாதிபதி, ஐ நா. செயலாளர் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட மகஜர்கள் பட்டிப்பளைப் பிரதேச செயலர் கே. சிவநாதனிடம் கையளிக்கப்பட்டன.
இந்தப் பேரணியை ஒட்டி வெல்லாவெளி, வவுணதீவு, கொக்கட்டிச்சோலை பிரதேச செயலர் பிரிவுகளில் பாடசாலைகள் இயங்கவில்லை. அரச திணைக்களங்கள் செயலிழந்திருந்தன. போக்குவரத்துக்கள் இடம் பெறவில்லை. (இ-21-3)

## விசாரணைக்கு சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23
கைதாகிக்காணாமற் போன ஏழு பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள வசதியாக அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரை எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.
காணாமற்போனதாகக் கருதப்படும் ஏழு பேரின் விவரம் வருமாறு:-
★ செல்லையா கந்தசாமி —கோண்டாவில்,
★ பற்குணலிங்கம் இராஜேந்திரன் -நல்லூர்,
★ காந்தன் அருண்டிரன்— 22/4, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு,
★ தர்மலிங்கம் சுதாகரன் —318, ஏ. பி. வீதி, அரியாலை,
★ செல்வதுரை செல்வகுமார்— 186, கண்டி வீதி, யாழ்ப்பாணம்,
★ துரை ஜுடூஸ் — பலாவளவு 125/48, ஏ. வி. வீதி, அரியாலை,
★ துரைராசா பாலச்சந்திரன் — 78, மலர்மகள் வீதி, அரியாலை. (இ-3)

## சிறுவனின் மரணம் தொடர்பாக சகோதரன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 23
கோப்பாய் மத்தி ஆசாரி லேனில் கடந்த 4 ஆம் திகதி எட்டு வயதுச் சிறுவன் சின்னப்பு முரளிதரன் என்பவரின் மரணம் தொடர்பாக அவரது சகோதரன் சின்னப்பு சிவகுமார் (வயது 16) கோப்பாய் பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.
இவரைத் தொடர்ந்து இரு வாரங்களுக்கு தடுப்புக் காவலில் வைத்திருக்குமாறு மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார். (இ-5-ரி)

### இராணுவத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்)
காலை 9 மணிக்கு திரும்பி வரும் பொழுது இவரிடம் இருந்த கலவாய் மீன் குத்தும் கம்பி மின்சாரம் பாய்ச்சப்பட்டிருந்த இராணுவ முள் வேலியில் முட்டியதினால் மின்சாரம் பாய்ந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.
இரவு நேரத்தில் இராணுவத்தினரின் முள்வேலிக்கு செலுத்தப்பட்டு வரும் மின்சாரம் காலையில் நிறுத்தி வைக்கப்படுகின்ற போதும் நேற்று மின்சாரம் நிறுத்தி வைக்கப்படாமையினால் இந்த மரணம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இவரின் சடலம் ஊர்காவற்றுறை பொலீஸாரினால் மரண விசாரணையின் பொருட்டு நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது (இ-5-167)

## பாராட்டு வைபவம்

"கலாபூஷணம்"
திரு. எல். திலகநாயகம் போல்
அவர்களை
யாழ். வலய இசை ஆசிரியர்கள்
25 – 07—99 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு
வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில்
பாராட்டிக் கௌரவிக்கவுள்ளனர்
அவ்வமயம் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்
கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை
அவர்களும் வாழ்த்துரை வழங்கி சிறப்பிக்கவுள்ளார்.
இசை ஆர்வலர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். வலய இசை ஆசிரியர்கள்.
(67662)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ. தே. க ...

(முதலாம் பக்கத் தொடர்)

டனர்.

இந்தப் போராட்டத்தின் போது ஜனாதிபதியின் கொடும்பாவி தீக்கிரையாக்கப்பட்டது.

போராட்டம் முடிவடைந்த பின்னர் ஐ. தே. க. உறுப்பினர் ராஜித சேனரத்ன தலைமையில் ஐ. தே. க. தொண்டர்கள் அலரி மாளிகை நோக்கிச் செல்ல முற்பட்ட போது ரணில் அதனைத் தடுத்து நிறுத்தினார். (இ-3)

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

அனுப்பி இருந்தனர்.

இந்த யோசனை குறித்து கொழும்பில் நேற்றுக்காலை நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றில் விரிவாக ஆராயப்பட்டது. இறுதியில் அந்த யோசனை அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது,

அதனை நிராகரித்து விட்டு கண்டி—யாழ். வீதியின் மேற்குப் புறமாக மாங்குளம்—துணுக்காய் வீதியில் பொது மக்கள் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்தும் புதிய யோசனை நேற்று விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டது.

மாங்குளம் — துணுக்காய் வீதியில் 5 கிலோ மீற்றர் நீளமும், ஒருகிலோ மீற்றர் அகலமும் கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று அந்த புதிய யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை கொழும்பில் நடைபெறும் செய்தியாளர் மாநாட்டில் இது விடயமாக இராணுவப் பேச்சாளர் விளக்கம் அளிக்கவிருக்கிறார்.

புதிய யோசனை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாங்குளம் — துணுக்காய் வீதி ஊடாக 5 கிலோ மீற்றர் நீளமும் ஒரு கிலோ மீற்றர் அகலமும் கொண்ட பொது மக்கள் பாதுகாப்பு வலயம் ஒன்றைத் திறக்கும் புதிய யோசனை ஒன்றை இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

ஏ-9 கண்டி — யாழ். வீதியில் மேற்கே 90 பாகையில் புதிய பொது மக்கள் பாதுகாப்பு வலயம் அமையவுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக முன்னர் தெரிவிக்கப்பட்ட யோசனை ஏ-9 வீதி வழியாக முன்னேறிச் செல்வதற்கான புதிய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு படையினருக்கு ஊக்கமளிக்கும் என புலிகள் தெரிவித்த அச்சத்தைப் போக்கும் வகையில் இந்த புதிய யோசனை உதவும் என இராணுவத்தின் தலைமை அதிகாரியும் வன்னிப் பகுதித் தளபதியுமான மேஜர் ஜெனரல் பலகல்ல செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக புலிகளுக்கு அனுப்பிய செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தில் வாரத்தில் 7 நாள்களும், நாளில் 24 மணித்தியாலமும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு இராணுவம் திடசங்கற்பம் கொண்டுள்ளது என்று பலகல்ல உறுதியளித்தார்.

இதற்கு முன்னர் மாங்குளத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி புலிகள் யோசனை தெரிவித்திருந்தனர். ஆனால் 5 கிலோ மீற்றர் நீளமும் ஒரு கிலோ மீற்றர் அகலமும் கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்துவது தொடர்பாக இலங்கை இராணுவம் தெரிவித்திருந்த யோசனையைப் புலிகள் நிராகரித்திருந்தனர். புலிகள் கடந்த வாரம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாக இராணுவத்துக்கு அனுப்பி வைத்த செய்தி ஒன்றில் உயிலங்குளம் — பள்ளமடு வீதி மீண்டும் திறக்கப்பட வேண்டும் எனக் கேட்டிருந்தனர்.

இந்த வேண்டுகோளுக்குப் பதிலளித்த பலகல்ல முன்னர் தெரிவித்தது போன்று தற்போதைய படை நடவடிக்கை காரணமாக உயிலங்குளம் சோதனை நிலையம் மூடப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். இந்த அடிப்படையிலேயே ஏனைய மூன்று மாற்று வழிகள் பற்றிப் புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தை அமைக்கும் யோசனைகளைப் புலிகள் ஏற்றுக்கொண்டனர். இதன் பின்னரே பொதுமக்கள் பாதுகாப்பு வலய திட்ட அமைப்பு பரிசிலனைக்கு முன்வைக்கபபட்டது.

புலிகள் இந்தயோசனையை நிராகரித்த பின்னர் முன்னையஉயிலங்குளம்சோதனை நிலையம் மீண்டும் திறக்கப் படவேண்டும்எனத் தற்போது கோருகின்றனர். இந்தக் கோரிக்கை மூலம் புலிகளின் விட்டுக் கொடுக்காத போக்கு மேலும் ஊர்ஜிதமாகியுள்ளது.

தற்போதைய தொடர்புகளின் சகல கட்டங்களின் போதும் விடுவிக்கப்படாத பகுதிகளில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றி இராணுவம் முழுமையாக உணர்ந்திருந்தது.

பொதுமக்களின் கஷ்டங்களைப் போக்க வசதியாக அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ள அதே நேரம் புலிகள் உடனடியாக பதிலளிக்கவேண்டும் என்று பலகல்ல கேட்டுள்ளார்

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-6-164)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தித்தார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர், அதிபர்கள் ஆகியோருக்கான இடர் காலக் கொடுப்பனவையும், அதிபர்களுக்கான சம்பள நிலுவையையும் முழுமையாக வழங்க வேண்டும்என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை உயர் கல்வி அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அவர்களுக்கு வழங்கி எஞ்சிய தொகையில் அரைகுறையாக ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கும் இனப் பாகுபாட்டுக் கொள்கையை ஏற்கமுடியாது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலேயே இந்த நிலை ஏற்படும் சூழ்நிலையை எதிர்த்துப் போராடப்போகிறோம்.

முதல் கட்டமாக அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சையை மேற்பார்வை செப்யும் பணிகளைப் பகிஷ்கரிக்கப் போகிறோம் —

இப்படி மகாசிவம் மேலும் தெரிவித்துள்ளார்.


எமது வீடியோ CD வெளியீடுகள்!

- ஒருவன் (பிரமிட் CD)
- வன்முறை
- அந்தப்புரம்
- விரலுக்கேத்த வீக்கம்

(இந்த CD பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம் )

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம்.

(சி/8279)



Dear Reverend Father

DAMIAN OMI

Felicitations and Best Wishes to you on your Birthday.

Let's God's grace be with you for Many More Years for the nation as well as for us.

– Healing Minds

(C/8274)



சில்லாலை

**புனித யாகப்பர் ஆலயத்திருவிழா**

★ நற்கருணை ஆராதனை
24-07-99 சனிக்கிழமை மாலை 5.30 மணி.

★ திருவிழாத் திருப்பலி
25-07-99 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

–பங்குத்தந்தையும்
பங்கு மக்களும்.

(67650)



யா/வட்டு. இந்துக் கல்லூரி

**பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்**

எமது சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 08—08—1999 [ஞாயிற்றுக்கிழமை] அன்று பி.ப. 4.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

–தலைவர்
பழைய மாணவர் சங்கம்
யா/வட்டு. இந்துக் கல்லூரி
சித்தன்கேணி.

[67655]



**NIRU TUITION CENTRE**

Station Road – Kondavil

( A/L 2000 )

இரசாயனவியல்
Organic Chemistry
சேதன இரசாயனம்

ஆரம்பம்: 24-07-99 சனி 3.30 P.m.

ஆசிரியர் திரு. N. மகேஸ்வரன்

[67641]



எமது இன்றைய புதிய வெளியீடு

24 மணி நேரத்தில் தயாரிக்கப்பட்ட
சுயம்வரம்

பிரகாஷ் ராஜ் நடித்த
மிஸ்டர் – Z

மதியத்திற்குப் பின் பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

வன்முறை
(பிரமிட் CD)

**நவம் வீடியோ**

ஒடக்கரை,
பருத்தித்துறை.

[67651]



Power Point

for

7 MS and 8 MS Batches

For further details

Contact on or before 24-07-1999

Director,
IIS, Jaffna.

(C/8276)



எமது புதிய வீடியோ CD வெளியீடு!

( குறைந்த விலையில் பிரதிகள் )

- வன்முறை
- அந்தப்புரம்
- விரலுக்கேத்த வீக்கம்

இன்றைய வீடியோ CD வெளியீடு!

- சுயம்வரம்

திரையரங்குகளுக்கு மட்டும்

**ஆர்க் வீடியோ லைபிறறி**

அம்மன் வீதி.

**அல்டி**

யாழ்ப்பாணம்.

(சி/8277)



அளவெட்டி நாகேஸ்வரம்

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**

**மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா**

**ஆடி - ஏகாதசி தீர்த்த விழா**

ஷெ ஆலயத்தில் 24-07-99 சனிக்கிழமை
மு. ப. 8.00 மணிக்கு ஆரம்பமாகி
சங்காபிஷேகமும் தீர்த்த உற்சவமும் நிகழும்.

பொ. ப. சபை.

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்,
அளவெட்டி.

(சி/8238)



**MILLENNIUM MUSICAL SHOW**

(புத்தாயிரமாண்டு இன்னிசை அருவி)

புத்தாயிரம் ஆண்டை வரவேற்கும்

**நாள்கள் இதோ... !**

September 9,10,11,12

இடம்: கைலாசபதி கலையரங்கம்

– மருத்துவபீட மாணவர்கள்

விளம்பர அன்பளிப்பு:
LAVANYA
Dental & Optical Service
525, Hospital Road, JAFFNA.

(சி/8278)



இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23 - 07 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org